- 1 DEC 2009

ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

கள்: பதினாறு

வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 15 செவ்வாய்க்கிழமை (01.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347




## லவாக்களிப்புக்கு ணப்பிக்கலாம்

(கொழும்பு)

த் தேர்தலில் தபால் மூலம் வாக் தி பெற்றவர்கள் டிசம்பர் முத டக்கம் விண்ணப்பிக்க முடி யும் ஆணையாளர் தயானந்த திஸா வித்துள்ளார்.

பங்கள் நிறுவனத்தின் தலை வட்ட தெரிவத்தாட்சி உத்தியோ அனுப்பப்படவேண்டும் என ப்பட்டுள்ளது.

னர், பொலிஸார், தேர்தல் கட (16ஆம் பக்கம் பார்க்க)

# வலி. வடக்கு மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்!

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(தெல்லிப்பழை)

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக் களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட வேண்டும். அத்துடன் பலாலி விமான நிலையத்தை கடற்கரை ஓரமாக அமைத்து மக்களின் வயல் காணிகளை அப கரிக்கும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டுமென தெல்லிப்பழை பிரதேச செய லக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடை பெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி. வடக்கு சங்கத்தலைவர் ஆர்.சி.நட ராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத் தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங் கம், பத்மினி (16ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த
# ர்வதேச மட்டத்தில் சூழ்ச்சி


## காப்பு செயலாளர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை கொண்டு வருவதற்கான சர்வதேச சூழ்ச்சி ஒன்று நடைபெற்று வருவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையிலேயே சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் குதித்துள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா, மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசிபெற்றபின் அவருடன் கலந்துரையாடுவதை படத் தில் காணலாம்.



## ணக்க அரசியல் மூலமே ப்பிரச்சினைக்குத் தீர்வு
### முடியும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(வவுனியா)

றை மட்டுமல்லாமல் பொது பல்வேறு பிரச்சினைகள் இருப் தெரியும். இந்தப் பிரச்சினைக ளுக்கு இணக்க அரசியல் மூலம் மட்டுமே தீர்வு காண முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

## விரிவுபடுத்தப்பட்ட மகிந்த சிந்தனை ஜனாதிபதியால் முன்வைக்கப்படும்
### போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)


விரிவுபடுத்தப்பட்ட மகிந்த சிந்தனை கொள் கைத் திட்டமொன்று விரைவில் ஜனாதிபதியி னால் முன்வைக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித் துள் ளார். எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் தமது தேர்தல் (16ஆம் பக்கம் பார்க்க)

## லிருந்து 102 அரச ஊழியர்கள் ரிக்கு கடமைக்குத் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

பூநகரி ஆகிய இடங்களில் ட்டுள்ள ... திணைக்களங் ... மையாற்றும் ... சேர்ந்த 102 ... வரை கடமைக்கு திரும்பியுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, துணுக்காய், பூநகரி பிரதேசங்களில் கல்வித் திணைக்களங்கள், பிரதேச சபைகள், பிரதேச செயலகங் (16ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதி வேட்பாளராக சம்பந்தன்? கூட்டமைப்பு ஆராய்வதாகத் தகவல்!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனை போட்டியிடவைப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழ் மக் களின் வாக்குகளை சிதறடிக்க வைக்காமல் தமிழர் தரப்பிலிருந்து ஒருவேட்பாளரை நிறுத்துமாறு தமிழ்த் (16ஆம் பக்கம் பார்க்க)

Day 7-01.12.2009


உலக எயிட்ஸ் தினம்–World AIDS Day 2009
HIV/AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும், மனித உரிமைகளை மதித்தலும் 'Universal Access and Human Rights'



இணையத் தளங்களில் HIV/AIDS தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள,
aidscontrol.gov.lk, www.unaids.org, www.who.org, www.avert.org
தவிர தேடல் பொறிகளூடாக (Search engines) தேவையான சொற்றொடர்களைப் பாவித்து உரிய இணையத்தளங்களூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
எயிட்ஸ் தினம் 2009
ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி உலகம் பூராகவும் எயிட்ஸ் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் மூலமாக எயிட்ஸ் தொடர்பில் ன் கவனம் ஈர்க்கப்படுவதுடன் மக்கள் மத்தியில் சாதகமான மனநிலை மாற்றமும் தூண்டப்படுகின்றது. உலக எயிட்ஸ் தினத்தின் இந்த வருடத்தின் ப் பொருள் HIV/AIDS தொடர்பில் பாதுகாப்புப் பெறுதல், பரிசோதனைகளை செய்து கொள்ளுதல், சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுதல் என்பன உலக ரும் அனைவருக்கும் இலகுவில் கிடைக்கச் செய்தல் மற்றும் HIV/AIDS தாக்கத்துக்குட்பட்டோரை சமூகத்தில் புறக்கணிக்காது அவர்களுடைய மனித மைகளை பாதுகாத்தலும், அவர்களது பராமரிப்பு மற்றும் கவனிப்பை உறுதி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் 'Universal access and Human ' என்பதாக அமைந்துள்ளது.
இருந்து எம்மைப் பாதுகாத்திடுவோம்.'

ஆக்கம் சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்.
அனுசரணை- TRRO
நிதியுதவி UNHCR
(C-3776)

வு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





சிறிலங்கா மக்கள் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளராக நியமனம் பெற்ற திலக்குமார உடுகம உள்ளிட்ட குழுவினர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டபின் திரும்புவதையும்,யாழ்.நாக விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டிருப்ப தையும் படங்களில் காணலாம்.


## அரசாங்க அறிவித்தல்
## யாழ்.மாவட்டச் செயலகம்

### வாகனங்கள் சேவீஸ் செய்வதற்கான கேள்வி விலை கோரல்-2010

யாழ்.மாவட்டச் செயலகத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்படும் வாகனங்களை சேவீஸ் செய்வதற்கான கேள்வி விலை கோரப்படுகின்றது.இது தொடர்பான நிபந்தனைகளையும், விண்ணப்பப்படிவத்தினையும் மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் 03.12.2009ஆம் திகதியிலிருந்து அலுவலக நாட்களில் காலை 9.00மணி தொடக்கம் பி.ப. 2.15 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.100னைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தலைவர், மாவட்டச் செயலக கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் விலாசமிட்டு, கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம்-2010 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ 28.12.2009ஆம் திகதி பி.ப. 2.30மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும்.அன்றைய தினம் பி.ப. 3.00மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

வாகனங்கள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| . பிக்கப் | வான் | கார் | ஜீப் |
| . மோட்டார் சைக்கிள் | முச்சக்கர வண்டி | | உழவு இயந்திரம் |
| . லொறி | பவுசர் | | திறந்த பாரவூர்தி (Canter) |
| . ஏனையவை | | | |

க.கணேஷ்,
அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலரும்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C- 3816)


## மகளிர் குழுக்களின் விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளவாலை பிராந்திய மகளிர் குழுக்களினால் மாதகலில் விற்பனை நிலையம் ஒன்று இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கியூடெக்-கரித்தாஸ் நிறுவன இயக்குநர் கி.ஜோ.ஜெயக்குமார் இவ் விற்பனை நிலையத்தை திறந்துவைக்கவுள்ளார்.

இவ்விற்பனை நிலையம் கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தினால் கிராமமட்டங்களில் உருவாக்கிய மகளிர் குழுக்களின் சுயமுயற்சியால் உருவாக்கப்பட்ட கைப்பணி பொருட்களை விற்பனை செய்வதற்காகவே திறந்துவைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

## புத்தாக்குநர்களுக்கான அவசர கூட்டம்

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த 21ஆம் திகதி அன்று நடத்தப்பட்ட புத்தாக்கப் போட்டியில் இருந்து தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகிய புத்தாக்கங்களின் புத்தாக்குநர்களுக்கான அவசர கூட்டம் இன்று காலை 10.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறையில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள் பெற்றோர் அல்லது பொறுப்பாசிரியருடன் தேசிய அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் ஒன்றின் பிரதியுடன் கலந்து கொள்ளுமாறு இப் போட்டிக்கான வடமாகாணப் பொறுப்பாசிரியர் கலாநிதி நா.சிவயோகன் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

## வடக்கில் பல இடங்களில் தேடுதல் நடவடிக்கை

வடக்கில் பல்வேறு பிரதேசங்களில் பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் போது பாரியளவிலான இராணுவத் தளபாடங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த நட வடிக்கைகள் புதுக்குடியிருப்பு, அடம்பன், இரணைமடு ஆகிய பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் போது ரி81ரக துப்பாக்கிகள், டெட்டனேட்டர்கள், 3ஆயிரத்திற்கும் அதிகமான ரி56 ரக துப்பாக்கி ரவைகள், சி4 வெடிபொருட்கள், கைக்குண்டுகள், இயந்திரத் துப்பாக்கிகள் என ஏராளமான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட 13 வெடிகுண்டுகளும், தானியக்கிகள் சிலவும் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.இதேவேளை மட்டக்களப்பு வாழைச்சேனையிலும் இவ்வாறான தேடுதல் மேற்கொள்ளப்பட்டு பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## இடம்பெயர்ந்த வன்னி மக்களில் 2,576 பேர் புல்மோட்டை முகாம்களில்

முல்லைத்தீவில் இருந்து புல்மோட்டைக்கு கொண்டு செல்லப்பட்ட தமிழ் மக்களில் 2ஆயிரத்து 576பேர் தற்போதும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக திருமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

புல்மோட்டையில் உள்ள முகாம்களில் இருந்து மக்கள் அனைவரும் மீள்குடியமர்த்தப்பட்டு விட்டதாக அரசு தெரிவித்துள்ள போதும் அங்குள்ள சகனம்-2 முகாமில் தற்போது 2,576 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் உக்கிரம் பெற்ற போது இவர்கள் கடல் வழியாக முல்லைத்தீவில் இருந்து திருமலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 706 மாணவர்களும் அடங்கியுள்ளனர். அவர்களுக்கான கல்வி வசதிகளை இரு ஆசிரியர்களும், சில தொண்டர் ஆசிரியர்களும் மேற்கொண்டு வருவதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. (ச-5)


மாபெரும் மலிவு விற்பனை

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க

01.12.2009 முதல் 31.12.2009 வரை

சகல விதமான துணிவகைகள் மற்றும் றெடிமேற் ஆடைகள் என்பனவற்றை விசேட கழிவு விலையில் மலிவாக பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

லைடன் புடைவை நிலையம்



இல.40, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2381

(C-3800)



தவறிவிட்டது

கருணாகரன் சுமதி ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம் (A01478 6712)யாழ்ப்பாணத்துக்கும் நல்லூருக்கும் இடையில் தொலைந்துவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும்.

தொடர்புக்கு:-
92A, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
T.P.077 2247844

(C-3820)



ஒரு அறை தேவை

வட்டு.இந்துக் கல்லூரியில் படிப்பித்த ஆசிரியருக்கு ரூபா. 500/=க்கு குறைவாக வாடகைக்கு அறை தேவை. கடிதமூலம் அறிவிக்கவும்.

சிவன் மாளிகை
மாரி அம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(4109)



DMI

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L DAY CLASS

புவியியல்-N.பாபு
பிரிவு-I-சனி, ஞாயிறு -8 am
பிரிவு-II-திங்,புதன்,வெள்ளி-7 am
ஆரம்பம்- 02.12.2009
புதன்-7 am

(4111)



உயர் கல்வி வாய்ப்பு

O/L, A/L உடன்

உயர் கல்வி வாய்ப்பு

0774371615

(4107)



பத்தாவது ஆண்டில் பாதம் பதிக்கும் காயத்திரி...

மாபெரும் புத்தகப்பெருவிழா

- சிறுவர் நூல்கள்
- புலமைப் பரிசில் நூல்கள்
- சிங்களம் கற்பதற்கான நூல்கள்
- சமய நூல்கள்
- பயிற்சி நூல்கள்
- கணினி நூல்கள்
- கதைப் புத்தகங்கள்
- இலக்கிய நூல்கள்
- பொது நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்

இன்று இறுதிநாள்

மலிவு விலையில்...

நாளை காலை 8.00 மணி தொடக்கம்பிற்பகல் 5.00

எமது வெளியீடுகளை 1000/= க்கு கொள்வனவு செய்தால் 2010 வர்ணக்கலண்டர் இலவசம்

பிரமாண்டமான புத்தகக் கண்காட்சி...

யாழ். அன்னை புத்தகசாலை அனுசரணையில்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அனுமதி இலவசம்

காயத்திரி பப்ளிகேஷன் கொழும்பு

011- 4981 906, 072 73 74 750

(C-3794)



கண்ணீர் அஞ்சலி



காரை மண்ணின் மைந்தனும் ... மக்கலான மனப்பாங்... சேவையிலும் மகத்தான மனிதாபிமான சேவை...

இளைப்பாறிய அரசாங்க அதிபர்

உயர்திரு. கந்தையா பொன்னம்பலம்

அவர்களின் மறைவு கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக் கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செஞ்சிலுவைச் சமூகம்,
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
காரைநகர் பிரிவு.

(C-3805)



வர்ணக் கலண்டர் மலிவு விலையில்

அழகிய வர்ணக் கலண்டர்கள் வர்த்தக விளம்பரம் பொறித்து மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

சரவணா அச்சகம்

233, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3771)

# இன்று ஒரு தகவல்

## நான் அவன் மாதிரி இல்லையே...

"எனக்கு அவனைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது" என்றார் ஒருவர்.

"ஏன்?" என்று கேட்டேன்.

"எப்பொழுது பார்த்தாலும் அவன் சிரித்துக் கொண்டே இருக்கிறான். என்னால் அப்படி இருக்க முடியவில்லையே!" என்றார். மனிதனுடைய இந்தத் தன்மைக்கு பெரியவர்கள் என்ன விளக்கம் சொல்கிறார்கள் தெரியுமா?

நமக்கு நம்முடைய உட்பக்கம் தெரியும். அதேபோல் நமக்கு மற்றவர்களின் வெளிப்பக்கம் மட்டுமே தெரியும்.

இதுதான் பொறாமையை உண்டாக்குகிறதாம்.

மற்றவர்களுக்கும் இதே நிலைமை தான். அதனால் தான் அவர்களும் நம்மைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள்.

மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறது இருக்கிறதல்லவா... அதுதான் பொறாமை. நம்மை எப்பொழுதும் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குத் தான் சிறு வயதிலிருந்தே பழக்கப்படுத்தியிருக்கிறார்கள்.

அதன் விளைவு... யாரைப்பார்த்தாலும் பொறாமையாக இருக்கிறது. அவரைப் போல் நம்மால் ஓடமுடியவில்லையே– பாட முடியவில்லையே என்று ஏங்குகிறோம்.

ஒருவர் நன்றாகச் சாப்பிட்டால் அவரை மாதிரி நம்மால் சாப்பிட முடியவில்லையே என்று நினைக்க ஆரம்பித்து விடுகிறோம்.

நண்பர் ஒருவர் வேடிக்கையாக சொன்னார்: "மாடு வைக்கோலைத் தின்று கொண்டிருந்தால் கூட மனிதன் அதைப் பார்த்துப் பொறாமைப்படுகிறானாம்" என்று.

நம்மால் அதைப்போல் வைக்கோலைத் தின்ன முடியவில்லயே என்ற கவலை.

தினசரி ... நாம் எத்தனையோ பேரைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. பழக வேண்டியிருக்கிறது. பார்ப்பவர்களையெல்லாம் நம்முடன் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டிருந்தால்...நம்மால் நிம்மதியாக இருக்க முடியாது.

ஒப்பிட்டுப் பார்க்கும் குணத்தை அடியோடு விட்டுட்டுப் பாருங்கள். நீங்கள் நீங்களாக இருப்பீர்கள். ஆனந்தமாக இருப்பீர்கள். அழுக்காறு ஓடியே போய்விடும்.

நாம் வேறு யாராகவும் இருக்க வேண்டிய அவசியமேயில்லை என்கிறார் ஓஷோ.

நல்ல வேளையாக மனிதன் மிருகங்களோடும் தாவரங்களோடும் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. அப்படிப் பார்க்க ஆரம்பித்து விட்டால் நிலைமை இன்றும் மோசமாகிவிடும்.

மாட்டைப் பார்த்துவிட்டு அதுபோல் நம்மால் அசை போட முடியவில்லையே என்று கவலைப்பட்டால் என்ன ஆகும்?

தென்னை மரத்தைப் பார்த்துவிட்டு நாமும் அவ்வளவு உயரமாக இருந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும். மரத்தில் ஏறாமலே தேங்காயைப் பறித்துக் கொள்ளலாமே... என்றா நினைப்பது?

அப்படி வளர்ந்து விட்டால் அதன்பின் எப்படி வீட்டுக்குள் நுழைவது என்று யோசித்துப் பாருங்கள். அப்பொழுதான் அதிலுள்ள கஷ்டம் புரியும்.

இந்த உலகத்தில் ஒருவர் போன்று இன்னொருவர் இல்லை. ஒவ்வொருவரிடமும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. யாரையும் யாரோடும் ஒப்பிட முடியாது.

இந்த உண்மையைச் சரியாகப் புரிந்து கொண்டால் போதும். அதன்பின் பெறாமைப்பட வேண்டிய அவசியமே இருக்காது. படைப்பைப் பொறுத்தவரைக்கும் நகல் என்று ஒன்றும் கிடையாது. எல்லாமே அசல் தான்.

உன்னைப் போல் இந்த உலகத்தில் இதுவரைக்கும் யாரும் இருந்ததில்லை. இனிமேலும் இருக்கப் போவதில்லை.

இக்கரைக்கு அக்கரை பச்சையாகத்தான் தெரியும். அக்கரையில் நின்று பார்ப்பவர்களுக்கு இக்கரை பச்சையாகத்தான் தெரியும் என்ற உண்மையைப் புரிந்து கொண்டால் போதும் பொறாமைக்கு விடை கொடுத்து விடலாம்.

இன்றைக்கு மனிதனுக்குள் பொறாமை உட்கார்ந்து கொண்டு என்னென்னவோ எல்லாம் செய்கிறது. அடுத்தவன் கஷ்டப்பட்டால் நமக்குச் சந்தோஷம் அடுத்தவன் சந்தோஷமாக இருந்தால் அது நமக்குக் கஷ்டமாக இருக்கிறது.

சிலபேர்... வீட்டில் 'கரண்ட் கட்' ஆகிவிட்டால் உடனே அவசரமாக வெளியில் ஓடிவந்து பார்ப்பார்கள். எதுக்கென்று நினைக்கிறீர்கள்?

எல்லோர் வீட்டிலும் கரண்ட் கட்டாகி விட்டதா என்று பார்ப்பதற்கு! அதில் ஒரு நிம்மதி.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சர்வதேச HIV/AIDS தினத்தை முன்னிட்ட சுவரொட்டிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் சர்வதேச HIV / AIDS தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளது.

இப்போட்டியின் வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் மற்றுத் சான்றிதழ்கள் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள சர்வதேச HIV / AIDS தின நிகழ்வில் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் 1 ஆம் பரிசு பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் 2 ஆம் பரிசு பெறுபவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் 3 ஆம் பரிசு பெறுபவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் ஆறுதல் பரிசு பெறுபவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாவும் வீதமும் வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் தவறாது இவ் விழாவில் கலந்து கொண்டு தமக்குரிய பரிசில்களை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களினதும் ஆறுதல் பரிசு பெற்றவர்களினதும் பெயர் விபரம் வருமாறு,

**பிரிவு - 1**

**பாடசாலை மாணவர்களுக்குரியது (தரம் 10 உம் அதற்கு மேற்பட்டதும்)**

நா. ஐஸ்வர்யா, ர. வித்தியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ர. ராஜாராம் (யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி).

**ஆறுதல் பரிசுகள்**

ஜா. தாரணி, ஜெ. திவ்யா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), வ. சரவணபவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பா. யசோதா (இணுவில் இந்துக் கல்லூரி), கு. சத்தியதாசன் (யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம்).

**பிரிவு - 2 திறந்த போட்டி**

நா. ராஜன் (ஆசிரியர், சங்கத்தாணை) ச. தர்மதாஸ் (ஆசிரியர் உடுவில்), செ. ஜெகன் (யாழ். பல்கலைக்கழகம்).

**ஆறுதல் பரிசுகள்**

அ. அன்ரன் கிறோசியன் (சுன்னாகம்), த. சபேசன் (இணுவில் மேற்கு), சி. சத்திய சங்கர், ச. நிருபராஜ் (யாழ். பல்கலைக்கழகம்), து. துஜீபா (பல்கலைக்கழக மாணவி உரும்பிராய்) (ஓ)

## உலக எயிட்ஸ் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

TRRO, UNHCR ஆகிய நிறுவனங்களுடன் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் இணைந்து நடத்தும் உலக எயிட்ஸ் தின நிகழ்வு இன்று காலை 9.30 யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராக யாழ். உலக சுகாதார நிறுவன ஆலோசகர் டாக்டர் என் சிவராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக யாழ். யுனிசெப் நிறுவன தலைமை அதிகாரி டாக்டர் டயானி ஆராக்கி யாழ். NECORD நிறுவன பிரதி திட்டப் பணிப்பாளர் ஆர். சிவறூபன் மற்றும் யாழ் UNHCR வெளிக்கள அலுவலக தலைமை அதிகாரி திருமதி மேரி திரிசியா இற்றகூட்டி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்ட சுவரொட்டி போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப் படவுள்ளன. (ஓ-9)

## மக்கள் வங்கி வழங்கும் சிசு உதான புலமைப்பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

2009 ஆம்ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மக்கள் வங்கி வழங்கும் *சிசு உதான புலமைப்பரிசில்களை* வெல்வதற்கான மாபெரும் சீட்டிழுப்பு ஒன்றை நடத்துவதற்கு மக்கள்வங்கி முன்வைத்துள்ளது.

இதில் கலந்து கொள்ள உங்கள் மகன் அல்லது மகள் 2009 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்களா? உங்கள் பிள்ளைகளுக்கான சிசு உதான அல்லது ஏதேனும் ஓர் சிறுவர் கணக்கினை மக்கள் வங்கிக்கிளையில் அல்லது சேவை நிலையத்தில் 2009 ஓகஸ்ட் 23 இற்கு முன் ஆரம்பித்துள்ளீர்களா? ஆரம்பித்த கணக்கின் மிகுதி 2009 ஓகஸ்ட் 23 இற்கு முன் 500ரூபாவிற்கு அதிகமாகியுள்ளதா? இவ்வினாக்களுக்கான விடை ஆம் எனின் இன்றே உங்கள் பிள்ளையின் கணக்கினை வைப்புச் செய்த மக்கள் வங்கிக் கிளையில் அல்லது சேவை நிலையத்தில் சிசு உதான புலமைப்பரிசில் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் சகல மாவட்டங்களிலும் 1ஆம், 2ஆம், 3ஆம் , 4ஆம், 5ஆம் இடங்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத்தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## இராசி பலன்

01-12-2009
(கார்த்திகை 15 செவ்வாய்க்கிழமை)
சதுர்த்தசி பிற்பகல் 3.31 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 3.39 மணிவரை
இராகுகாலம் 3.14 - 4.44 மணிவரை
சுபநேரம் 10.44- 12.14 மணிவரை
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம், சர்வாலய தீபம்
நோன்மதி தினம்.

| | |
|---|---|
| மேடம் | குடும்பக் கவலை, காரிய தாமதம், பெரியோர் மனஸ்தாபம், தனவிரயம். |
| இடபம் | நண்பர்கள் உதவி, போசன சுகம், புதிய பொருள் சேர்க்கை, ஆழ்ந்த சிந்தனை. |
| மிதுனம் | கோபப்படுதல், தனவிரயம், தந்தை வழி உறவு, பிரயாணம். |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சி, பொருட் சேர்க்கை, எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல். |
| சிங்கம் | இனிய சம்பவம், ஆரோக்கியம், தொழில் நன்மை, நண்பர்கள் உதவி. |
| கன்னி | அதிக பிரயாசை, பெரியோர் சந்திப்பு, தேவையற்ற அச்சம், புதிய முயற்சி. |
| துலாம் | உஷ்ண வியாதி, எதிர்பாராத அச்சம், பிறருக்கு உதவுதல், போசன சுகம். |
| விருச்சிகம் | வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, நல்ல செய்தி, முயற்சி கைகூடும். |
| தனுசு | சுகவாழ்வு, திடீர் பயணம், பணவருவாய், சத்துரு ஜெயம். |
| மகரம் | சிறுவியாதி, போசன சுகக் குறைவு, கௌரவக்குறைவு, தொழில் சிந்தை. |
| கும்பம் | கல்வியில் மேன்மை, முயற்சி தாமதம், சுபசெலவு, பயந்த சுபாவம். |
| மீனம் | சகோதரர் உதவி, தனவரவு, வாக்கு மேன்மை, சுபசெய்தி. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 130 | 120 |
| தக்காளி | 70 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 120 | 140 | 120 |
| கரட் | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 160 |
| பாகற்காய் | 160 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயிற்றங்காய் | 120 | 140 | 100 |
| லீக்ஸ் | 160 | 180 | 160 |
| பீற்றூட் | -- | -- | 100 |
| கறிமிளகாய் | 140 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 200 |
| கீரை – 1 பிடி | 35 | 40 | 30 |
| தேசிக்காய் | 200 | 220 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 35 |



தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்ற ஜெயரத்தினம் நினைவுதினம் மற்றும் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழா நிகழ்வில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் ஆகியோர் உரையாற்றுவதையும், நினைவுப்பேருரையை பா.மகாலிங்கசிவம் நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

## யாழ்.கல்வி வலய பரிசுத் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் பெரு விளையாட்டு தடகளப் போட்டிக்கான பரிசுத் தினம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோகசாமி ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இராசரத்தினம் குமாரவடிவேல் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பளார் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் வாழ்த்துரை வழங்கவுள்ளதுடன் திருமதி இராஜினி குமாரவடிவேல் பரிசில்களை வழங்கி சிறப்பிக்கவுள்ளார். (ஓ-9)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் தொடர்ந்து நாளை புதன்கிழமை நல்லூர் பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணிமுதல் 11 மணிவரை இராணி வீதியிலும், நண்பகல் 11.30 இலிருந்து 1.30 மணிவரை செம்மணி வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

மேலும் கொழும்புத்துறை பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 8 மணி முதல் 11 மணிவரை பாசையூர் சுகாதார கவனிப்பு நிலையத்திலும், நண்பகல் 11.30 மணியிலிருந்து 1.30 மணிவரை பாசையூர் சிறுவர் பூங்கா வளாகத்திலும் வைத்து ஏற்றப் படவுள்ளது.

அத்துடன் அரியாலை பொது சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி முதல் 11மணிவரை நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்திலும், நண்பகல் 11. 30 மணியிலிருந்து 1.30 மணிவரை றக்கா வீதி இளங்கதிர் சனசமூக நிலைத்திலும் வைத்து ஏற்றப் படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள்ளார். (ஓ-9)

## சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தின் நாவலர் சுதேசக் கல்வி விழிப்புணர்வு வாரம் டிசம்பர் 01-08

(யாழ்ப்பாணம்)

சுதேச பண்பாட்டின் பாதுகாவலரும் எமது சுதேசிய சைவ வித்தியாலயங்களினதும் இந்துக் கல்லூரிகளினதும் தோற்றத்துக்கு முன்னோடியாக திகழ்ந்தவருமான நல்லை நகர் ஆறுமுகநாவலருடைய குருபூசைத் தினம் எதிர்வரும் மார்கழி 8 ஆம் திகதி ஆகும்.

எமது பிரதேச சிறுவர்களுக்கு, குறிப்பாக வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்து இருக்கும் குழந்தைகளின் நல்வாழ்விற்கு ஆறுமுகநாவலரின் பணியை ஒத்த கல்விப் பணி இன்றைய காலகட்டத்திலும் தேவைப்படுகின்றது. அந்தவகையில் சுதேச சைவ மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாகவும் சிறார்களின் நல்வாழ்வு செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் விதத்திலும் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 8 ஆம் திகதி வரை ஒரு வார காலப் பகுதியை நாவலர் சுதேச விழிப்புணர்வு வாரமாக கடைப்பிடிக்குமாறு சைவ மக்களை சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தினர் வேண்டுகின்றனர்.

இந்தக் காலப்பகுதியில் ஒவ்வொரு சைவனும் சைவ அமைப்புக்களும் தங்களாலான பணிகளை மீளக்குடியமர்ந்த உறவுகளுக்கு ஆற்றுமாறு வேண்டிக் கொள்கின்றனர். அவையாவன,

- இதுவரை பாடசாலைகளில் இணையாமல் இருக்கின்ற மாணவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைகளில் இணைக்க உதவுதல்.
- ஆதரவற்றிருக்கும் மாணவர்களிற்கு உதவித்தொகை, பாடசாலை உபகரணங்கள், சப்பாத்துக்கள் போன்றனவற்றை வழங்கி உதவுதல்
- ஒவ்வொரு ஊரிலும் உள்ள சைவ அமைப்புக்கள் தம்மால் முடிந்தளவில் படிப்பகங்களை இயக்குதல் உள்ளிட்ட இச் சிறார்களின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- ஒவ்வொரு ஊரிலும் சைவ நற்பணி மன்றங்களை உருவாக்கி அங்குள்ள அமைப்புக்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு ஊரின் சகல சமூகத்தினரும் பயன்படும் வகையில் கல்வி, சுகாதார, பண்பாடு, சமய நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- மரங்களை பொது இடங்களிலும் பாடசாலை, ஆலயம் ஆகியவற்றிலும் நாட்டி எமது சூழ்லை பாதுகாத்தலும், நலிவுற்ற மக்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்கு பயன்படும் வகையில் பயன்தரு மரக்கன்றுகளை வழங்கி வீட்டுத் தோட்டங்களை அமைக்க உதவுதல்.
- ஊனமுற்றவர்களிற்கு உதவுதலும் அவர்களுக்கு செயற்கை அவயவங்கள், சக்கர நாற்காலிகள் பெற வழிவகை செய்தல் போன்றனவாகும். (ஓ)

## மதர் ஸ்ரீலங்காவின் செயமர்வுகள்

(அல்வாய்)

மதர் ஸ்ரீலங்காவின் வடமாகாணத்திற்கான செயலமர்வில் இன்று செவ்வாய்க்கிழமை மன்னார் கல்வி வலயத்திலும், நாளை புதன்கிழமை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேலும் இச் செயலமர்வு யாழ்.மாவட்டத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய நான்கு வலயங்களுக்கும், பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.இராமநாதன் கல்லூரியில் வலிகாம வலயத்திற்கும் செயலமர்வு நடைபெறவுள்ளது. இச் செயலமர்வுகளில் அவ்வவ் வலயங்களைச் சேர்ந்த IAB,IC, தரம் II பாடசாலை அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளும்படி ஜனாதிபதி செயலக மதர் ஸ்ரீலங்காவிற்கு பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

## க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி க.பொ.த. (சா/த) மாணவர்களின் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளதால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் சீருடை அணிந்து பெற்றோருடன் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-4)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகர் பிரதிஸ்டா மகா கும்பாபிஷேக நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 11 மணியில் இருந்து 11.30 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-17)

## பிள்ளையார் கதைப்படிப்பும் இலட்சார்ச்சனை மஹாயாகமும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலயப் பிள்ளையார் கதைப்படிப்பும் இலட்சார்ச்சனை மஹா யாகமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதில் தினமும் காலை 7.30 மணி தொடக்கம் 9 மணிவரை இலட்சார்ச்சனையும் அதனைத் தொடர்ந்து காலை 10 மணி முதல் பிள்ளையார் கதைப்படிப்பும் இடம்பெறவுள்ளது. (ஓ-9)

## சமய தீட்சை வழங்கலும் திருக்கார்த்திகை உற்சவமும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சமய தீட்சை வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து திருக்கார்த்திகை விளக்கீடு உற்சவம் பிற்பகல் 2 மணிக்கு கும்ப பூஜையுடன் ஆரம்பித்து சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ-9)

## சத்ய சாயி சேவா நிலையத்தின் போயா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

நிகழ்வுகளில் அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெற்று காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி ஓம்காரம், வேதபாராயணம்,தியானம்,சாதனை,பஜனை, சிறப்புச் சொற்பொழிவு,நாராயண சேவை என்பன நடைபெறவுள்ளது. (ஓ-9)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை கீழ்குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும் என சுன்னாகம் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதில் கந்தரோடை, மாசியப்பிட்டி, வலிகாமம் மேற்குப் பிரதேசம் முழுவதும் காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி ஆகிய பிரதேசங்களிலும்

உரும்பிராய், கோண்டாவில், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபை பகுதி, சுன்னாகம்,மல்லாகம், ஏழாலை,அளவெட்டி, தெல்லிப்பழை, பண்ணாகம்ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் எனவும் திருத்தவேலைகள் முடிவடையும் பட்சத்தில் குறித்த நேரத்திற்கு முன்னர் மின்சாரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஓ-4)


வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மானிப்பாய்

01.12.2009

## கூறுவிலை கோரல்

எமது கொத்தணியினால் நவாலியில் நடாத்தப்படுகின்ற பனம் சாராய வடிசாலையில் வடிசாலைப் பொறித் தொகுதிகள் அதனோடு இணைந்த இயந்திர உபகரணங்கள் என்பனவும் அதனோடு இணைந்த இணைப்புக்களும் திருத்தம் சேவிஸ் செய்வதற்கும், மாற்ற வேண்டிய பொருட்கள் மாற்றுவதற்கும், மாபிள் பெட்டி புனரமைப்பதற்கும் கூறுவிலை கோரப்படுகின்றது.

வடிசாலைப் பொறித் தொகுதி புதிதாக அமைத்தமை, அல்லது திருத்தம் சேவிஸ் செய்தமைக்கான உறுதிப்படுத்தல் கடிதம் சமர்ப்பிக்கும் தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மட்டும் கூறுவிலை சமர்ப்பிக்கலாம். கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் இதனைப் பார்வையிட்டு இவ்வேலைக்கான கூறுவிலையையும் வேலை விபரங்களையும் குறிப்பிட்டு எதிர்வரும் 14.12.2009 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் "*தலைவர் வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மானிப்பாய்*" என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(வேலைக்கான உத்தரவாதம் 1 வருடம் இருத்தல் வேண்டும்)

பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்

(C-3807)

# கல்விப் பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும்

11



**சைவ மங்கையர் வித்தியாலயத்தின் ஆரம்பகால அதிபராக இருந்த செல்வி நாகம்மாள் காசிப்பிள்ளையின் ஞாபகார்த்த விழாவைச் (23.05.2009) சைவமங்கையர் கழகம் நடாத்திய போது அதில் கலந்துகொண்ட பேராசிரியர்சி.க.சிற்றம்பலம்"சைவக்கல்வி பாரம்பரியமும் சேர்.பொன் இராமநாதனும் - ஒருநோக்கு" என்ற பொருளில் ஆற்றிய உரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**


சைவச் சிறார்கள் சைவப் பண்பாட்டுச் சூழலிலே மேலைத்தேய நாகரிகத்தின் விழுமியங்களை அதுவும் தமது தனித்துவம் அழியாது உள்வாங்கி முன்னேற வேண்டும் என விழைந்த சேர்.பொன். இராமநாதன் அவர்கள் நிறுவிய கல்லூரிகள் நாட்டின் பிற கல்லூரிகளுக்கும் முன் மாதிரியாக அமைந்த தோடமையாது, பல்கலைக்கழக அந்தஸ்தையும் பெற்றதுமான அவரது கல்விச் சிந்தனைக்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்தது எனலாம்.

கல்லூரிகளை நிறுவியது மட்டுமன்றி பிற தனியார் பாடசாலைகளுக்கும் அவர்கள் அரச மானியத்தைப் பெறும்வரை நிதி உதவி அளித்தது மட்டுமின்றி கல்வி விருத்தி பெறவும் அயராதுழைத்தார். ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வடபகுதிக்கு வேண்டப்பட்ட நேரத்தில் கோப்பாயில் தமக்குரிய 20 ஏக்கர் நிலத்தில் 5 ஏக்கர் நிலத்தை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அமைக்க அன்பளிப்புச் செய்தார். இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரிகளிலும் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக கலாசாலைகளையும் நிறுவினார். அத்துடன் இராமநாதன் கல்லூரியில் இவர் சைவ மங்கையர் சபையை நிறுவியதன் மூலம் இங்கு கற்ற நங்யைர் தாம் பெற்ற கல்வியின் விழுமியங்களை தாம் செல்லுமிடமெல்லாம் எடுத்துச் செல்வார்கள் என நம்பினார். இத்தகைய ஒரு நற்பணியாக அமைத்ததுதான் கொழும்பில் 1932இல் இராமநாதன் கல்லூரியில் சில காலம் கற்பித்த ஆசிரியை திருமதி யோகேந்திரா துரைசுவாமியின் தாயாரும் வேறு சிலரும் அமைத்த சைவ மங்கையர் கழகமாகும்.

### சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம்

கல்லூரிகளை மட்டும் அமைப்பதோடு நின்றுவிடாது சைவப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் மிஷனரிமாருக்கு இருப்பது போன்ற கட்டமைப்பு சைவர்களுக்கும் இருத்தல் வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்த இவர் 1923 இல் (9.12.1923 இல்) சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தினை நிறுவினார். இப்பணியில் இவரோடு சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி, எஸ்.இராசரத்தினம், எம். எஸ்.இராசரத்தினம், ஏ.சபாபதி, வீ.வீரசிங்கம், எஸ்.சிவபாதசுந்தரம், எஸ்.கந்தையா, ரி.எஸ்,துரையப்பா, எம்.சுவாமிநாதன் போன்றோர் உதவியவர்கள் ஆவர். எனினும் சேர்.பொன். இராமநாதனின் பின்னர் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம் என்றால் இந்துபோட் இராசரத்தினம், இந்துபோட் இராசரத்தினம் என்றால் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம் என்று கூறுமளவுக்கு இதன் வளர்ச்சிக்கு உழைத்த பெருமை எஸ். இராசரத்தினம் அவர்களுக்கே உரித்தாகும். இச் சங்கத்தினைக் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான ஒரு அமைப்பென 1926 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின் மூலம் அரசு அங்கீகரித்தது. ஆரம்பகாலத்திலிருந்து இதன் தலைவர், பொதுமுகாமையாளர் பதவிகளை அலங்கரித்த சேர்.பொன். இராமநாதன் 1926 இல் இப் பதவிகளைத் துறந்தாலும் இறுதிவரை இதன் வளர்ச்சிக்கு அயராத பாடுபட்டார். இந்நிறுவனத்தின் மகுடவாசமாக "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகெமலாம்" என்பதாகும். மக்களின் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நோக்காது எல்லோருக்கும் கல்வி வழங்க வேண்டுமென்பதே சேர்.பொன். இராமநாதனின் சிந்தனையாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமையினை உயர்த்தக் கல்வியே சிறந்த சாதனம் என உணர்ந்தார். இந்நோக்குடன் சங்கம்வசதி குறைந்த மக்களுக்கும் கல்வி சென்றடையப் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்தது. அதுமட்டுமன்றித் தமது நேரத்தையும் சக்தியையும் இந் நோக்கம் நிறைவேற்றுவதற்காகத் தமது வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் செலவிட்டது குறிப்பிடத்தக்கது. இச் சங்கம் அமைத்த முதற் பள்ளிக்கூடம் மாதகல் விக்கினேஸ்வரா வித்தியா சாலையாகும். இது 1924 ஆம் ஆண்டு மே மாதம் திறந்து வைக்கப்பட்டது. எனினும் முதலாண்டில் 150 மாணவரைக் கொண்ட ஒரு பள்ளிக்கூடமே இருந்தது. இரண்டாம் ஆண்டில் 2250 மாணவர்களைக் கொண்ட 22 பள்ளிக்கூடங்களும் 3ஆம் ஆண்டில் 4000 மாணவர்களைக் கொண்ட 32 பள்ளிக்கூடங்கள் சங்கத்தின் முகாமையில் இருந்தமையானது சங்கத்தின் முகாமையும் தலைமையும் தரமாக இருந்ததை எடுத்துக் காட்டுகின்றது. இத் துரித முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்கியவர் சேர்.பொன்.இராமநாதன் என்றால் மிகையாகாது. இதனால் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம் "இராமநாதனுடைய அறிவின் குழந்தை" எனவும் விளிக்கப்படுவதோடு, இராமநாதனும் இருபதாம் நூற்றாண்டில் இலங்கையின் சைவக் கல்வி இயக்கத்தின் தந்தை" எனவும் புகழப்பட்டுள்ளார். இச் சங்கம் சைவ ஆசிரிய கலாசாலை யையும் நிறுவியது. 1928 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கலைமகள் விழாவில தொடக்கி வைக்கப்பட்ட சைவாசிரிய கலாசாலையின் பணி

*"சைவசமயப் பண்பாட்டிற்கும் மரபுக்கும் ஏற்றவாறு இந்நிலையம் இயங்குமெனவும், சைவ நெறியின் நித்தியமான தத்துவத்தையும், சைவ ஒளியையும், சைவம் புகட்டும் கருணை யையும் பரப்பும் எனவும் கொள்ளப் பட்டது"*



தியான நிலையில்
சேர்.பொன்னம்பலம் இராமநாதன்

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**

இச்சங்கம் அநாதைகளையும் அரவணைத்து அநாதைச் சிறுவர் இல்லம் ஒன்றையும் நிறுவியிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமன்றித் தமிழர் வாழும் ஏனைய பிராந்தியங்களான பூநகரி, மட்டுவில், கச்சிலை மடு, வாழைச்சேனை, நாவலப்பிட்டி ஆகிய இடங்களிலும் இதன்பணி விஸ்தீரணம் பெற்றது. இராமநாதனின் வழிகாட்டலால் உரம் பெற்று எஸ்.இராசரத்தினம் அவர்களின் கடின உழைப்பால் விரிவடைந்து 1960 ஆம் ஆண்டு அரசாங்கம் இந் நிறுவனத்தின் கல்லூரிகளைப் பொறுப்பேற்கும் வரை சைவர்கள் மத்தியில் காணப்பட்ட மிகப் பெரிய இயக்கமாக இது வளர்ச்சி கண்டது. (தொடரும்)

# அமெரிக்காவின் நிபந்தனைகளுக்குட்பட்டு பொன்சேகா இராணுவ இரகசியங்களை வெளியிடக்கூடாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

கூட்டுப்படைகளின் முன்னாள் தலைமை அதிகாரியான ஜெனரல் சரத்பொன்சேகா, யுத்த கால இராணுவ நடவடிக்கைகளின் இரகசியங்களை வெளியிட முற்படக்கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய மீள்குடியேற்றம் நடைபெறுமானால் அது மீண்டும் ஒரு பயங்கரவாதத்தையும் பிரிவினைவாதத்தையுமே தோற்றுவிக்கும். இதுவே அமெரிக்காவின் எதிர்பார்ப்பாகும். இந்த சர்வதேச சதி தோற்கடிக்கப்பட வேண்டும் என்று அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு தேசிய நூலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவ்வியக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் தோற்கடித்து அவரது அரசாங்கத்தை கவிழ்த்துவிட வேண்டும் என்பதே அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட சர்வதேசத்தின் திட்டமாகும். ஈராக்கில் சதாம் ஹுசைனை சிறைப்படுத்தி அழித்துவிட்ட அமெரிக்கா தற்போது அங்கு தனது ஆதிக்கத்தை செலுத்தியுள்ளது.

அதே வகையில் இலங்கையிலும் ஆக்கிரமிப்பை நடத்துவதற்கு சதிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு உள்ளூரிலும் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படுகின்றன.

முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் சரத் பொன்சேகாவை தனது வலைக்குள் விழுத்திய அமெரிக்கா அவரையே தற்போது ஜனாதிபதி வேட்பாளராகவும் நிறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த சதிகாரர்களின் சூழ்ச்சிகளுக்கமைய ஜெனரல் சரத்பொன்சேகா நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதாகவும் மீள்குடியேற்றத்தை உறுதிப்படுத்துவதாகவும் கூறிவருகின்றார்.

நிறைவேற்று அதிகாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பது பிரதமர் தலைமையிலான அதிகாரம் கொண்ட அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பதும் அமெரிக்காவின் விருப்பம் ஆகும்.

ஜெனரல் சரத்பொன்சேகா அமெரிக்காவின் குடியுரிமையை எதிர்பார்த்திருப்பவர் என்ற காரணத்தினால் அவர் அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு உட்பட்டே நடந்து கொள்கிறார் என்பது தெளிவாகின்றது.

அதேபோல் மீள்குடியேற்றம் என்று கூறிவிட்டு தற்போது எதிர்க்கட்சிகளின் யோசனையின் பிரகாரம் அது நடைபெறுமானால் மீண்டும் ஒரு பயங்கரவாதம் உரு வாவதற்கே அதுவழிவகுக்கும் என்றார். (ஓ-6)

# வீதியில் மின்விளக்குகள் பொருத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை நிர்வாகப் பகுதியிலுள்ள கடுக்காயடி ஒழுங்கை வீதி மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவில் இருளில் மூழ்கியுள்ளது.

அவ்வீதியால் இரவில் பிரயாணம் செய்வோர் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரியவருகிறது. சம்பந்தப்பட்டவர்கள் இவ் விடயத்தில் கவனமெடுத்து இவ் ஒழுங்கைக்கு மின்விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-134)

## வடக்கு கிழக்கில்

# போரினால் பாதிக்கப்பட்ட வாக்காளர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டும்

## பவ்ரல் அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது, விசேட ஏற்பாடுகள் செய்யப்படுவது குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் என்று பவ்ரல் எனப்படும் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டுக் குழு தெரிவித்திருக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த வாக்காளர்கள் வாக்களிப்பின்போது பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்றும் தமது ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் தகுதியை அவர்கள் இழக்க நேரிடக்கூடும் என்றும் அந்தக் குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் தமது உடமைகள் முக்கிய ஆவணங்கள் என்பவற்றை இழந்துள்ள நிலையில், தேசிய அடையாள அட்டை இல்லாமல் வாக்களிக்கச் செல்வதும் சிக்கலான ஒருவிடயமாக இருக்கும் என்றும் நீதியும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கைக் குழுவின் பணிப்பாளர் குறிப்பிடுகின்றார். (ஓ-6)

# விஜயநகரப் பேரரசுக் கால சமுதாயமும் பண்பாடும்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

66

அரிசி,கண்டசாரி சர்க்கரை ஆகியவை மெலிந்தே, ஏடன், ஓர்முஜ்,இலங்கை ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. தேங்காய், கருமிளகு ஆகிய உணவுப் பொருட்களும், சாயப் பொருட்களான அவுரி, வாசனைப் பொருட்களான குங்குலியம், சந்தனம், கனிப்பொருட்களான இரும்பு, கல்வகையிலான நவரத்தினம், செம்பு,பவளம் முதலிய நவரத்தின் கற்களும், பருத்தி, பட்டு ஆடைகள், காலிகோ என்றும் அச்சடித்த துணி வகைகளும் ஏற்றுமதி செய்யப் பெற்றன.

ஏற்றுமதியைப் போலவே இறக்குமதிப் பொருட்களும் நிறைந்திருந்தன. பொன், வெள்ளி, தகரம்,காரீயம்,செம்பு,இரும்பு ஆகியவை ஏடன், சீனா, ஜெட்டா முதலானன பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்றன. நவரத்தினக் கற்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பெற்ற போதிலும் இலங்கையிலிருந்து செம்பு, பவளம் ஆகியன இறக்குமதி செய்யப்பெற்றன.

சுமத்திரா, மெலூக்கஸ் ஆகிய பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப் பெற்றவை லவங்கம்,பட்டை ஆகியன.மலாக்கா,ஜாவா, போர்னியோ,சீனா, வங்கத்திலிருந்து அகில், கற்பூரம்,வாசனைப் பொருட்கள், மிளகு ஆகியன இறக்குமதியாயின. அபின், மஞ்சள் பன்னீர், கஸ்தூரி ஆகியன சீனாவிலிருந்து இறக்குமதியாயின.

வாணிபம் சிறக்க வழிகள் வேண்டும். நெடுஞ்சாலைகள் வாணிபத்திற்குப் பயன் பட்டன. வண்டிகளில் பொருட்களை ஏற்றிச் சென்றனர். பரிசல், படகுகள், மரங்கலங்கள், கப்பல்கள் பயன்பெற்றன.

நாகப்பட்டினம் திருமலை ராயப் பட்டினம்; தரங்கம்பாடி, பரங்கிப்பேட்டை, தேவாரப் பட்டினம், கூளிமே, சதுரங்கப் பட்டினம், மயிலை, பழவேற்காடு ஆகியவை துறை முகங்களாகும். இவ்விடயங்களிலிருந்து கலங்கள் பல இடங்களுக்கும் சென்றன. நகரங்கள் பல பகுதிகளுடனும் சாலை வழியே இணைக்கப் பெற்றன. விஜயநகரத் தலை நகரை மைலாப்பூருடன் சாலை ஒன்று இணைத்தது.

சந்திரிகிரி, திருப்பதி, பழவேற்காடு ஆகிய நகரங்களுடே இச்சாலை சென்றது. காளகஸ்தி, திருப்பதி, காஞ்சி இடையே நெடுஞ் சாலையொன்று இருந்தது. திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை, இராமேஸ்வரம், தனுஷ்கோடி ஆகிய இடங்களுடே மற்றொரு பாதை சென்றது.

### தொழில், வணிகம் குழாம்கள்

தொழிலாளர்களைக் கொண்ட வணிகக் குழுக்கள் அவை செய்யும் தொழிலுக்கேற்ப கைவினைக் குழாம்கள், வணிகக் குழாம்கள் என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டன. கல்வெட்டுக்கள் 18 வகை கைவினைக் குழாம்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. குயவர், எண்ணெய் வணிகர், நெசவாளர், சலவையாளர், முடி திருத்துவோர் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

காஞ்சியில் கம்மாளர் குழு இருந்தது. விரிஞ்சுபுரத்தில் நெசவாளர் குழுக்களும், சித்திர மேழிப்பெரிய நாட்டார் என்று அழைக்கப் பெற்ற வேளாண் குழுவி னரும் இருந்தனர்.

பளஞ்சிகர், நானா தேசிகர், வாணிப நகரத்தார், வைசியர்,மும்முரி தண்டர்கள், செட்டிகள் , ஜயவோளு , மணிக்கிராமத்தார் முதலானோர் வணிகக் குழுவினர் ஆவர். குதிரைவணிகர் , குதிரைச் செட்டிகள் ஆவர். நவரத்தினக் கற்களில் வாணிபத்தை மணிக் கிராமத்தார் என்னும் குழுவினர் கட்டுப் படுத்தினர்.

தக்கணபீடபூமியிலும், தென்னகத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றிய ஜயவோளு குழுவினர் தம்மை வாசுதேவர், வீரபத்திரரின் வாரிசுகள் என்று கூறிக்கொண்டனர். இக் குழுவில் அடங்கியவர்கள் கவரர்கள், செட்டிகள்,வீரவாணியர், நானா தேசிகர், ஏரி வீரர்கள் ஆவர்.

இஸ்லாமியர்,போர்த்துக்கீசர் , டச்சுக்காரர்கள், டேனியர்களும் பணியாற்றினர். விஜய நகரப் பேரரசுக் கோட்டைப் போரில் தோல்வியுற்ற பின்னர் போர்த்துக்கீசரின் வாணிகம் வீழ்ந்தது.

நாகப்பட்டினம் வேலூர், சந்திரகிரி ஆகியவை மேல்நாட்டவர் வாணிபம் செய்த இடங்கள். தேவனாம் பட்டினம் டச்சுக்காரர்கள் வாணிப நிலையமாக விளங்கியது. போர்த்துக்கீசர் தேவனாம் பட்டினத்துத் தொழிற் கூடத்தை விஜயநகரப் பேரரசின் துணையோடு பிடுங்கிக் கொண்டனர்.

**மங்கள முருகேசன்**

டச்சுக்காரர்கள் பழவேற்காட்டில் எழுப்பிய கோட்டையும்,தொழிற்கூடமும், தரைமட்டமாக்கப்பட்டன. தரங்கம்பாடியில் டேனியர்கள் தொழிற்கூடம் அமைத்தனர். ஆங்கிலேயரும் டச்சுக்காரர்களும் பழவேற்காட்டில் தொழிற் கூடம் அமைக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. (தொடரும்)

**கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற "விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்" எனும் ஆய்வரங்கில் நாளை முதல் பேராசிரியர் மு.வரதராசன் வழங்கிய "விஜயநகரப் பேரரசுக் காலச் சமய நூல்கள் " (கி.பி. 1100-1700) எனும் ஆய்வுக் கட்டுரை வெளிவரும்.**

---

# அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுறுவதாக மீள்குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் விசனம்

போதியளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென மீள்குடியேற்றப்பட்ட கிராம மக்களில் ஒருதொகுதியினர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் வசதிகள் போதுமானதாக இல்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக யுத்த காலத்தில் எல்லைக் கிராமங்களில் வசித்த சிங்கள மக்கள் தற்போது மீளவும் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கு போதியளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடிப்படை வசதிகள் இன்றித் தாம் அல்லலுறுவதாகவும், போதியளவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் மீள்குடியேற்றப்பட்ட இடம்பெயர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத பட்சத்தில் மீண்டும் முகாம்களில் வாழ்வதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமென குறித்த மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வவுனியாவை அண்டியுள்ள பிரதேசங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்களே இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.தமது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு நிதி மற்றும் ஏனைய உதவிகள் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-6)



வடமராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட கணித விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கரணவாய் வித்தியாலய மாணவி வி.சாளினிக்கு யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட விரிவுரையாளர் ஆ.சுப்பிரமணியம் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அரச கருமமொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஒவ்வொரு அரச நிறுவனங்களுக்கும் இரு அதிகாரிகள் நியமனம்

## அமைச்சர் டியூ குணசேகர

அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஒவ்வொரு அரச நிறுவனத்திற்கும் தலா இரண்டு அதிகாரிகளை நியமிக்க, அரசியல் அமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச நிறுவனங்களில் தமிழ்மொழி மூலம் வழங்கப்படவேண்டிய சேவைகளை உரியவகையில் முன்னெடுப்பதே இதன் முக்கிய நோக்கம் என அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

நிறுவனத் தலைவர் மற்றும் அவருக்கு கீழ் செயற்படும் முக்கிய அதிகாரி என்பவர்களே இந்தப் பதவிகளுக்காக நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் அரச கருமமொழி கொள்கை உரிய முறையில் நடைமுறைப்படுவது தொடர்பாக குறிப்பிட்ட அதிகாரிகளே அரசாங்கத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த நியமனங்களை விரைவில் வழங்கும் வகையில் அதுபற்றிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

நியமிக்கப்படும் அதிகாரிகள் அரச கரும மொழிக் கொள்கையை உரிய முறையில் செயற்படுத்தத் தவறும் பட்சத்தில் அது குறித்து தம்மிடம் முறைப்பாடு செய்யமுடியும் எனவும் அரசியலமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் கூறினார்.

இதற்கமைய அரச நிறுவனங்களுக்குத் தமிழ்மொழியில் அனுப்பி வைக்கப்படும் கடிதங்களுக்கான பதில்கள், தமிழ்மொழியிலேயே அனுப்பிவைக்கப்படவேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# மேலும் 400 குடும்பங்கள் அடுத்தவாரம் வவுனியாவில் குடியேற்றம்

(கொழும்பு)

நிவாரணக் கிராமங்களில் உள்ள மேலும் 400 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அடுத்த வாரம் வவுனியா வடக்குப் பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

புளியங்குளம் வடக்கு மற்றும் தெற்கு மன்னக்குளம் கனகராயன்குளம் வடக்கு மற்றும் தெற்கு உள்ளிட்ட எட்டுப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவர்கள் மீளக்குடியமர்த்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கில் இன்னும் 20 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.இங்கு எட்டுப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மீள்குடியேற்றத்துக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கு அரச அலுவலகங்கள் மீள இயங்கத் தொடங்கியுள்ளதுடன் கனகராயன் மகா வித்தியாலயம், புளியங்குளம் வித்தியாலயம் ஆகிய இரண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீளத் திறக்கப்படுமென்றும் அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# இடம் பெயர் மக்களின் உரிமைகளை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்


## உலகத் தலைவர்கள் அமைப்பு கோரிக்கை

இடம்பெயர் மக்களின் உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென உலகத் தலைவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வயது முதிர்ந்த உலகத் தலைவர்களினால் இந்த விசேட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் துரித கதியில் சுதந்திரமாக இடம் நகர அனுமதிக் கப்பட வேண்டுமென என நோபல் பரிசு வென்ற பேராயரும் வயது முதிர்ந்த உலகத் தலைவர்கள் அமைப்பின் உறுப்பினருமான பேராயர் டெஸ்ட்மன் டுடு எழுத்து மூலம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இலங்கை இடம்பெயர் மக்களுக்கு தமது விஜயத்தின் மூலம் நன்மை கிட்டும் என்றால் வயது முதிர்ந்த உலகத் தலைவர்கள் அமைப்பு பிரநிதிகள் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வார்கள் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

# இலங்கையில் பொதுநலவாய மாநாட்டுக்கு ஸ்டீவன் ஸ்மித் முட்டுக்கட்டை



(கொழும்பு)

அவுஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் ஸ்டீவன் ஸ்மித்தின் நடவடிக்கைகளினால் இலங்கையில் பொதுநலவாய நாடுகள் மாநாட்டை நடத்த முடியாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது.

2011ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்தவிடாமல் செய்த திட்டத்தின் பின்னணியில் ஸ்டிவன் ஸ்மித்துக்கு பிரதான பங்கு காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளை இலங்கைக்கு எதிராக திசை திருப்பி தமது நாட்டின் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நடத்துவதற்கு ஸ்டீவன் ஸ்மித் முக்கிய பங்காற்றியுள்ளார்.

இலங்கையில் மாநாட்டை நடத்துவதற்கு எதிர்ப்புத்தெரிவித்த பிரித்தானியா, கனடா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளின் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் இதுவரையில் உத்தியோகப்பூர்வமாக எந்த வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. (ஓ-6)


யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

**Post Graduate Diploma in Management (Pre.MBA)** (MBA final (Topup) in UK / London) [காலம் 9 மாதங்கள்]

To Whom : பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

**Foundation Diploma In Hospitality Management** (Topup degree in UK / London) [காலம் 6 மாதங்கள்] Hotel Management

இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.

கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது. மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**Diploma in English** 100 % வெற்றி

100 % பயிற்சி **Advanced Diploma in English** [காலம் 6 மாதங்கள்]

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழ உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

**Access Programming** (Foundation Degree Programme) [காலம் 6 மாதங்கள்]

O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு **Foundation Diploma In Nursing** (Health & Social Care) Topup degree in UK / London [காலம் 6 மாதங்கள்]

கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

**Foundation Diploma in Management** [காலம் 6 மாதங்கள்] (For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)

இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.

தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 E-mail: info@bchs.lk
HotLines: 0773501499 0777222422/ 0714299935

(C-3786)



UNION ASSURANCE யூனியன் அஷ்யூரன்ஸ்

'ஆயுட்காலம் முழுவதற்கும் ஆதரித்து நிற்பவர் நாம்'

யூனியன் அஷ்யூரன்ஸ் மிகப் பெரும் வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் PLC யின் பலத்தினதும், உறுதிப்பாட்டினதும் பின்னணி ஆதரவுடன் இயங்கும் காப்புறுதித் துறையில் 22 வருடங்களைக் கடந்த நிறுவனமாகும்.

எமது எதிர்பார்ப்பு...

யாழ். குடாநாட்டில், வடமராட்சி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து பின்வரும் பதவிகளோடு எமது அணியில் ஆற்றல் வளமும், பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் திறனும், விடாமுயற்சியும், திறமையும் உள்ள இளைஞர், யுவதிகளை இணைத்து எமது யாழ் மக்களுக்கு திருப்திகரமான காப்புறுதி சேவையினை வழங்குவதாகும்.

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்படவுள்ளது.




பதவி வெற்றிடங்கள்

- பதவி - 1: காப்புறுதி ஆலோசகர்
- பதவி - 2: தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி - 3: சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி - 4: தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி - 5: சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி - 6: உதவி முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பதவி - 7: முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பதவி - 8: உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி - 9: முகவர் அபிவிருத்தி முகாமையாளர்

தகைமை: க.பொ.த.சாதாரணதரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி (ஆகக் குறைந்த தகைமை)

நன்மைகள்:- நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலை வாய்ப்பு (பதவி 6,7,8,9,) பயிற்சிக் காலத்தின் போது மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கப்படும், ஓய்வூதியம் வழங்கப்படும்

A/L பரீட்சையின் முடிவுகள் உங்கள் எதிர்பார்ப்பினை நிறைவேற்றவில்லையா? கவலை வேண்டாம் எமது யூனியன் அஷ்யூரன்ஸ் குடும்பம் உங் களை அரவணைத்து தொழில் பாதுகாப்பை வழங்கி உங்களது சுயமுன்னேற்றத்திற்கான வருமானத்துடன் கூடிய அரிய சந்தர்ப்பத்தை வழங்கவிருக்கிறது.

வன்னிப் பகுதியிலிருந்து வந்து வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

தவறாமல் தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு உங்களது சுயவிபரக் கோவையுடன்

நேர்முகத் தேர்வு
காலம் :- 03.12.2009 (வியாழக்கிழமை)
நேரம் :- முற்பகல் 9.30 மணி
இடம் :- பிரதான மண்டபம், யூனியன் அஷ்யூரன்ஸ் 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் சர்வதேச தரத்திலான தொழில் தகைமை சான்றிதழை பெற்று காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு :- தொ.பே. 021 222 3753, 077 342 2716 அ.அன்ரன், விற்பனை முகாமையாளா

(C-3787)

# மேல்மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை - 2009

# பயிற்சி வினாத்தாள் - விஞ்ஞானம்

## பகுதி-I

## 1 மணித்தியாலயம்

**கவனிக்க**

i) சகல வினாக்களுக்கும் விடை தருக.
ii) இலக்கம் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள் (1),(2),(3),(4) என்னும் விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் வட்டங்களில் விடைக்குரிய வட்டத்தினுள் (X) புள்ளடி இடுக.
iv) அவ்விடைத்தாளின் பின்னால் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அதன்படி செயற்படுக.


---

(01) ஈரலிப்பான சூழலில் வாழும் அங்கியொன்று பின்வரும் இயல்புகளைக் கொண்டிருக்கிறது.
A) உடல் துண்டங்களாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது.
B) எளிய தூக்கங்களைக் கொண்டுள்ளது.
C) ஈரலிப்பான தோலை உடையது.
இவ்வங்கி எந்த விலங்கு கணத்தில் உள்ளடங்கும்
1.அனலீடா 2)மொலஸ்கா 3)சீலந்தரேற்றா 4)ஆத்திரபோடா

(02) பற்றிரீயா, பங்கசு, அல்கா மற்றும் புரட்டோசோவா ஆகியன சில நுண்ணங்கிக் கூட்டங்களாகும். இவற்றிற்கான உதாரணங்களைக் கொண்டுள்ள சரியான ஒழுங்கு
1.பூஞ்சணம், சல்மனெல்லா, இசுப்பைரோகைரா, அமீபா
2.விப்ரியோ,பெனிசில்லியம், கிளமிடமோனசு, பரமிசியம்
3.பூஞ்சணம்,சல்மனெல்லா, பரமீசியம்,அமீபா
4.பரமீசியம், சல்மனெல்லா, பெனிசில்லியம், இசுப்பைரோகைரா

(03) மனிதனில் உணவுச் சமிபாடு தொடர்பான பிழையான கூற்று
1.அமைலேசினால் மாப்பொருள் குளுக்கோசாகின்றது.
2.இலிப்பேசினால் இலிப்பிட்டுகள் கொழுப்பமிலமாகவும் கிளசரோலாகவும் மாறுகின்றது.
3.பெப்சினால் புரதமானது பகுதிச்சமிபாடடையச் செய்யப்பட்டு பொலிபெப்தைட்டாக மாற்றப்படுகின்றது.
4.திருச்சினால் புரதம் அமினோ அமிலமாக்கப்படுகின்றது.

(04) பச்சைத்தாவர இலையின் உள்ளமைப்பு இங்கு தரப்பட்டுள்ளது. எக்காலங்களில் ஒளித்தொகுப்பு நடைபெறுகின்றது?




1.A,B,E 2)B,C,D
3)A,B,C 4)B,E,C

(5) பின்வரும் செயன்முறைகளில் மனிதச் சிறுநீரகத்தின் தொழில் அல்லாதது
1.மேலதிக நீரை வெளியேற்றல்
2.குளுக்கோசு அகத்துறிஞ்சல்
3.நைதரசன் கழிவுப்பொருட்களை வெளியேற்றல்
4.யூரியா உற்பத்தி செய்தல்

(6) சிறு குடலினால் குருதிக்குள் உறிஞ்சப்படும் குளுக்கோசு மூலக்கூறு நுரையீரலைச் சென்றடையும் பாதை கீழே தரப்பட்டுள்ளளது.
சிறுகுடல் ⟶ ஈரல்வாயிநாளம் ⟶ A ⟶ கீழ்பெருநாளம்
வலதுசோணையறை ⟶ வலது இதயவறை ⟶ B ⟶ நுரையீரல்
A B முறையே குறிப்பிடக்கூடியன
1. சுவாசப்பை நாடி, ஈரல் நாடி 2. ஈரல் நாளம், சுவாசப் நாடி
3. ஈரல்நாடி, சுவாசப்பை நாடி 4. ஈரல் நாளம், சுவாசப்பை நாளம்

(7) வலதுபுற நிரலில் சில இழையங்களும் இடதுபுற நிரலில் அவற்றின் தொழில்களும் ஒழுங்கினிற் தரப்பட்டுள்ளன 1,2,3,4 இழையங்களுக்கான சரியான தொழில்களை முறையாகக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள

| | |
|---|---|
| 1. குருதித்திரவவிழையம் | A -நீரைக்கடத்துவது, உறுதித் தன்மையை வழங்கும் |
| 2. காழ் இழையம | B -உடலின் அங்கங்களைச் சூழ்ந்துகாணப்படும். |
| 3. மேலணி இழையம் | C -உடல் அசைவிற்கு உதவும் |
| 4. தசை இழையம்D | D-பதார்த்தங்களை கடத்தும், நோய்களில் இருந்து பாதுகாக்கும். |

1.A,B,C,D 2.B,D,A,C 3.D,A,B,C 4.A,D,B,C

(08) ஆவியுயிர்ப்பு வீதம் தொடர்பாக மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட 4 கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.
A.ஒளிச் செறிவு அதிகரிக்க ஆவியுயிர்ப்பு அதிகரிக்கின்றது.
B.சூழல் வெப்பநிலையதிகரிக்க ஆவியுயிர்ப்பு அதிகரிக்கின்றது.
C. வளிமணடல ஈரப்பதன் அதிகரிக்க ஆவியுயிர்ப்பு அதிகரிக்கின்றது.
D. காற்றின் வேகம் அதிகரிக்க ஆவியுயிர்ப்பு குறைவடைகின்றது.

இவற்றுள் சரியான கூற்றுக்களாவன
1.A யும் C யும் 2.A யும் B யும் 3.C யும் D யும் 4.A,B,C ஆகிய மூன்றும்

(09) மனித உடலின் வெப்பநிலைச் சீராக்கல் தொடர்பான சரியான கூற்று
1.சூழல் வெப்பநிலை குறைவடையும் போது தோலின் மேற்பரப்புக்கு அண்மையிலுள்ள குருதிமயிர்க் குழாய்கள் விரிவடைகின்றன.
2. உடலின் உள்ளக வெப்பநிலை அதிகரிக்கமபோது அனுசேபவீதம் அதிகரிக்கின்றது.
3. சூழல வெப்பநிலை குறைவடையும்போது தோல் மயிர்கள் சிலிர்க்கின்றன.
4. உடலின் உள்ளக வெப்பநிலை குறைவடையும் போது வியர்வை உற்பத்தியாகின்றது.

(10) ஒடுக்கற் பிரிவினால் உற்பத்தி செய்யப்படும் இருவிதமான கலங்கள்
1.கடற்பஞ்சுக்கலமும், ஒட்டருக்கலமும்
2.மகரந்தமணியும், கடற்பஞ்சுக்கலமும்
3.மகரந்தமணியும், ஒட்டருக்கலமும்
4.மகரந்தமணியும், சூல்வித்தும்

(11) பெண் இனப்பெருக்கத்தொகுதியின் அமைப்பும் தொழிலும் தொடர்பான பிழையான கூற்று
1. சூல்வித்தகத்தில் தாயின் குருதியும் முளையத்தின் குருதியும் ஒன்றுடனொன்று கலக்கின்றது.
2. மகப்பேற்றின் பின்பு ஈஸ்ரோஜன்,புறோஜெஸ்ரோன் செறிவு குறைகின்றது.
3. புறோலக்டின் எனும் ஓமோன் பாலுற்பத்தியைத் தூண்டுகின்றது.
4. கருக்கட்டல் நடைபெறாவிடில் சூல் உருவாகி 14 நாட்களின் பின்பு மாதவிடாய் ஏற்படும்.

(12) தூயவழிவந்த இரு பட்டாணித் தாவரங்களில் மஞ்சள்நிற விதைகள் உள்ள தவாரத்துடன் பச்சைநிற விதையுள்ள தாவரம் இனங் கலக்கப்பட்டது. மஞ்சள்நிற வித்துடைய தாவரம் ஆட்சியுடையது $F_1$ தாவரங்களை தற்கருக்கட்டலுக்குட்படுத்திய போது 600 தாவரங்கள் பெறப்பட்டன.

இவற்றுள் மஞ்சள் நிற விதைதரும் தாவரங்களினதும் பச்சைநிற விதைதரும் தாவரங்களினதும் எண்ணிக்கைகளை சரியாகக் குறிப்பது.

| | மஞ்சள் நிற விதைகள் | பச்சைநிற விதைகள் |
|---|---|---|
| 1. | 400 | 200 |
| 2. | 450 | 150 |
| 3. | 500 | 100 |
| 4. | 300 | 300 |

(13) வளி மண்டலத்தில் உள்ள கூறுகளில் ஏற்படும் மோசமான மாற்றங்களினால் பின்வரும் சம்பவங்கள் ஏற்படுகின்றன.

A. புவியின் துருவங்களிலுள்ள பனிக்கட்டிகள் உருகுதல்.
B. கடல் நீரின் வெப்பநிலை அதிகரித்தல்
C. தோலில் புற்றுநோய்க் கட்டிகள் தோன்றுதல்
D. தாவரங்களில் ஒளித் தொகுப்பு வீதம் குறைவடைதல்
இவற்றுள் புற ஊதாக் கதிர்களால் ஏற்படக்கூடிய விளைவுகளை விளக்கும் கூற்றுகள்

1.A யும்,B யும் 2.B யும்,C யும் 3.C யும், D யும் 4.A யும் D யும்

(14) மண்ணிலுள்ள உக்கலின் இயல்புகள் பற்றி ஒரு மாணவனால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.இவற்றுள் சரியானது.

1. நீரில் கரைந்து உயிர்ச்செயல் முறையினால் விரைவாகப் பிரிகையடைவன.
2. நீரில் கரையாத நிலையில் உயிர்ச் செயன்முறையினால் மெதுவாகப் பிரிகையடைவன.
3. நீரில் கரைந்து, உயிர்ச்செயன் முறையினால் மெதுவாகப் பிரிகையடைவன.
4. நீரில் கரையாத நிலையில் உயிர்ச் செயன்முறையினால் விரைவாகப் பிரிகையடைவன.

(15) ஒரு மூலகம் சம்பந்தமான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
ஒட்சைட்டு அமில இயல்பைக் கொண்டது.
அறை வெப்ப நிலையில் திண்ணமாகக் காணப்படும்
பிற திருப்பங்களாக உள்ளன.

அம்மூலகமானது
1.mg 2.Al 3.Cl 4.S


(16) தாவர உற்பத்திகள் சிலவும் அதனுடன் தொடர்பான இரசாயன தாக்கங்கள் இரண்டும் இங்கும் தரப்பட்டுள்ளன.

$$C_6H_{12}O_{6(aq)} \xrightarrow{(X)} 2C_2H_5OH_{(aq)} + 2CO_{2(g)}$$
$$2C_2H_5OH_{(aq)} \xrightarrow{(Y)} (Z) + H_2O_{(l)}$$

X,Y,Z ஆகியவற்றைக் காட்டும் சரியான ஒழுங்கு முறை

1. மதுவம்,அச்றறோபக்டர், அசற்றிக்கமிலம் ($CH_3COOH$)
2. அசற்றோபக்டர், மதுவம், அசற்றிக்கமில் ($CH_3COOH$)
3. மதுவம், அசற்றோபக்டர், போமிக்கமிலம் (HCOOH)
4. அசற்றோபக்டர், மதுவம், போமிக்கமிலம் (HCOOH)

(17) இரசாயனப் பதார்த்ம் ஒன்றைக் கொண்டுள்ள பெயரிடப்பட்டுள்ள போத்தலின் வரிப்படம் இங்கு தரப்பட்டுள்ளது.
அத்தரவுகள் மூலம் அறியக்கூடிய விடயம்




1. $100cm^3$ நீரில் $4cm^3$ ஐதரசன் குளோரைட்டுக் கொண்டுள்ளது.
2. $96cm^3$ நீரில் $4cm^3$ ஐதரசன் குளோரைட்டைக் கொண்டுள்ளது.
3. $100cm^3$ நீரக்கரைசல் $4cm^3$ ஐதரசன் குளோரைட்டைக் கொண்டுள்ளது.
4. $96cm^3$ நீரக்கரைசல் $4cm^3$ ஐதரசன் குளோரைட்டைக்கொண்டுள்ளது.

• சுண்ணாம்புக் கல் பைத்தொழிலுடன் தொடர்பான பாய்ச்சல் கோட்டுப் படம் கீழே தரப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி 18ஆம், 19ஆம் வினாக்களுக்கு விடை தருக.




(18) P,Q,R செயன்முறைகளைச் சரியாகத் தருவது
1. நீர் சேர்த்தல், வெப்பமாக்கல், குளோரினேற்றுதல்.
2. வெப்பமேற்றுதல், குளோரினேற்றுதல், நீர் சேர்த்தல்.
3. நீரேற்றுதல், குளோரீனேற்றுதல், வெப்பமேற்றுதல்.
4. வெப்பமேற்றுதல், நீர் சேர்த்தல், குளோரினேற்றுதல்.

(19) மேலே தரப்பட்டவற்றில் X பயன்படுத்தப்படாத சந்தர்ப்பம்
1. விவசாயத்தில் உரமாக்கப் பயன்படுகின்றது.
2. உலோகப் பிரித்தெடுத்தல் தொழிற்சாலைகளில் பயன்படுகின்றது.
3. கடதாசிக் கூழை வெளிற்றப் பயன்படுத்தப்படுகின்றது.
4. கல்சியம் காபனேட்டு உற்பத்தியாக்கக் கற்கரியுடன் சேர்த்தல்.

(20) காகிதாதிகள் கொண்டுள்ள அறையில் நெருப்புப் பிடித்தது. தீயைக் கட்டுப்படுத்துவதற்காக அறையின் யன்னல்க்ள, கதவுகள், யாவும் பூட்டப்பட்டன. சோடா அமிலத் தீயணைக்கருவி தீயணைக்கப் பயன்படுத்தப்பட்டது. இச்சம்பவத்துடன் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற்கொள்ளுங்கள்.

A இது C வகுப்புத் தீ.
B க்தவுகள் யன்னல்கள் பூட்டப்பட்டதால் தூயவளியும், காற்று வீச்சும் தடை செய்யப்படுகின்றன.
C தகனத்திற்குத் துணைபுரியாத காபனீரொடசைட்டு வாயுவினால் தீ கட்டுப் படுத்தப்படுகின்றது.


**இவற்றுள் சரியான கூற்று.**

i- A,B ii- B,C iii- A,C iv- A,B,C

(21) $250cm^3$ கரைசலில் 5g சோடியம் ஐதரொட்சைட் கரைந்திருப்பின் கரைசலின் செறிவு யாது?
**(Na = 23, O = 16, H = 1)**

i- $0.5\ moldm^{-3}$ ii- $1.0\ moldm^{-3}$
iii- $1.5\ moldm^{-3}$ iv- $2.0\ moldm^{-3}$

(22) இங்கு தரப்படும் படம் குறிப்பது.




1. அயன் பிணைப்புடனான காபனீரொட்சைட்டு மூலக்கூறு.
2. அயன் பிணைப்புடனான காபனீரொட்சைட்டு அணு.
3. பங்கீட்டு வலுப்பிணைப்புடனான காபனீரொட்சைட்டு அணு.
4. பங்கீட்டு வலுப்பிணைப்புடனான காபனீரொட்சைட்டு மூலக்கூறு.


(23) ஒரு மூலக்கூறு ஒன்றின் சூத்திரம் $A_2(SO_4)_3$ இந்த A மூலகம் பொசுபேற்று அயனுடன் சேர்வை உண்டாக்குமானால் அதன் சூத்திரம்.

i- $APO_4$ ii- $A_2(PO_4)_3$ iii- $A_3(PO_4)_2$ iv- $A_3PO_4$

(24) பச்சை வீட்டு வாயுக்களைக் கொண்டுள்ள கூட்டம்
1. $CO_2$, $CH_4$, CFC, $NO_2$ 2. $CO_2$, $CH_4$, CFC, $H_2O$
3. $CO_2$, $O_3$, $CH_4$, $Cl_2$ 4. $CO_2$, $O_3$, $H_2O$, $Cl_2$

(25) பின்வருவனவற்றுள் மேலெறிந்த கல் ஒன்று திரும்பவும் கீழ் நோக்கி விழுவதுடன் தொடர்புடைய கூற்று எது?
1. கல்லில் மேல்நோக்கிய விசை மட்டுமே தொழிற்படுகின்றது.
2. வேகம் எப்பொழுதும் மேல்நோக்கியே காணப்படும்.
3. ஆர்முடுகல் எப்போதும் கீழ்நோக்கியே காணப்படும்.
4. வேகம் எப்போதும் சீரானது.

(26) காற்றுறிஞ்சி முறையிலான கொழுவி, கண்ணாடியில் அழுத்தப்பட்டதும் அது கண்ணாடியில் ஒட்டியிருப்பதை அருகிலுள்ள படம் காட்டுகிறது. இதில்





1. B யிலுள்ள அமுக்கம் A யினுள்ளே உள்ள அமுக்கத்திலும் குறைவானது.
2. Bயிலுள்ள அமுக்கம் Aயிலுள்ளதிலும் அதிகமானது.
3. ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அழுத்தம் கொக்கியனுள் தொடர்ந்தும் காணப்படும்.
4. இறப்பர் கொக்கி ஒட்டும் தன்மையானது.

(27) கீழே தரப்பட்டுள்ளவற்றில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது வகை நெம்புகளுக்கு உதாரணங்களை சரியான ஒழுங்கில் காட்டுவது.
1. சாவணம், கத்தரிக்கோல், ஒற்றைச்சில்லு வண்டி.
2. இருசிறுவர்கள் விளையாடும் ஏற்றப்பலகை , ஒற்றைச்சில்லு வண்டி, கத்தரிக்கோல்
3. கத்தரிக்கோல், பாக்குவெட்டி, தூண்டிற்கோல்
4. பாக்குவெட்டி, ஒற்றைச்சில்லு வண்டி, கத்தரிக்கோல்.

(28) பொருளொன்றை வெப்பமாக்கும்போது, அதுபெறும் வெப்பத்தைத் தீர்மானிக்கும் காரணியல்லாதது.
1. பொருளின் திணிவு
2. வெப்பநிலை வேறுபாடு.
3. பொருள் மேற்பரப்பிரன் பளபளப்பு அல்லது கருமையான தன்மை.
4. பொருள் ஆக்கப்பட்டுள்ள திரவியத்தின் தன்மை.

(29) இங்கு தரப்பட்டுள்ள மின்சுற்றுக்கள் A,Bயில் மின்குமிழ்களின் பிரகாசம் தொடர்பான சரியான கூற்று.





1. மின்சுற்று Aயின் மின்குமிழ்களின் பிரகாசம் உயர்வு. மின்னோட்டமும் உயர்வு.
2. மின்சுற்று Bயின் மின்குமிழ்களின் பிரகாசம் உயர்வு. மின்னோட்டமும் உயர்வு.
3. மின்சுற்று Aயின் மின்குமிழ்களின் பிரகாசம் உயர்வு. பாயும் மின்னோட்ட அளவு குறைவு.
4. மின்சுற்று Bயின் மின்குமிழ்களின் பிரகாசம் குறைவு. மின்னோட்ட அளவும் குறைவு.

(30) $90^o$ யினால் ஒளிக்கதிர்களைத் தெறிப்படையச் செய்யக்கூடிய இரு உபகரணங்கள்
1. தளவாடியும் குவிவுவில்லையும்
2. குவிவாடியும் குவிவுவில்லையும்
3. தளவாடியும் அரியமும்
4. குவிவுவில்லையும் அரியமும்.

(31) சைக்கிள் தைனமோவின் தொழிற்பாடுபற்றி மிகச்சரியாகத் தரப்பட்டுள்ள கூற்று எது?
1. காந்தப்புலத்தில் கம்பிச்சுருளின் சுழற்சி
2. கம்பிசசுருளினுள் காந்தச் சுழற்சி
3. காந்தமும், கம்பிச்சுருளினதும் சுழற்சி
4. காந்தப்புலத்தில் காந்தத்தின் சுழற்சி

(32) வீட்டு மின்சுற்றில் மின்குமிழ்கள் இணைக்கப்படக்கூடிய இருமுறைகளை A,B காட்டுகின்றது.




1. A சரி, Bயிலுள்ள மின்குமிழ் ஒளிராது.
2. B சரி, A யிலுள்ள மின்குமிழ் ஒளிராது
3. A சரி, பாவனையாளர்க்கு இது பாதுகாப்பானது
4. B சரி, பாவனையாளர்க்கு பாதுகாப்பானது.


(33) கசெற் பட்டிகை நாடாவில் ஒலி பதிக்கப்படும் முறையானது.
1. துடிக்கும் மின்புலமாக 2. இலக்கக் கோலமாக
3. மின்காந்த அலையாக 4. நாடாவில் ஒருகோடு போட்டது போல

(34) பின்வருவனவற்றுள் வேலை நடைபெற்றுள்ளது என்பதைக் காட்டுவது,
1. பொருள் ஒன்று மென்மையான கிடைத்தளத்தினூடு சீரான வேகத்தில் அசைதல்.
2. மனிதன் ஒருவன் வீட்டுச்சுவரில் உள்ளங்கையை வைத்துத்தள்ளுதல்.
3. புவி சூரியனைச் சுற்றுதல்.
4. மாடிப்படியூடாக கதிரை ஒன்றை மேலே தூக்கிச் செல்லுதல்.

(35) வெப்பமானி ஒன்று செந்நித்திரவத்தைக் கொண்டுள்ளது. அதன் குமிழ் பெரியது. வெப்பநிலை வீச்சு $-20^oC$ தொடக்கம் $60^oC$ வரை. இந்த வெப்பமானியிலுள்ள திரவம்
1. இரசமும் 2. அற்ககோல்
3. இரசமும் அற்ககோலும் 4 கிளைசரின்

(36) மறைஏற்றம் பெற்ற கோல் ஒன்று பொன்னிலை மின்காட்டியின் தகட்டிற்கருகே கொண்டுவரும் போது,
1. பொன்னிலைகளுக்கு இடையேயான தள்ளுகை குறையும்.
2. பொன்னிலைகளுக்கு இடையேயான தள்ளுகை அதிகரிக்கும்.
3. பொன்னிலைகளில் எம்மாற்றமும் ஏற்படாது.
4. பொன்னிலைகளில் கவர்ச்சியும், பின்னர் தள்ளுகையும் நிகழும்.

(37) இரு உணவுச் சங்கிலிகள் இங்கு தரப்பட்டுள்ளன. அதிகரிக்கும் சனத்தொகைக்குப் பொருத்தமான உயவுச்சங்கிலி.




1. உணவுச்சங்கிலி,A
2. உணவுச்சங்கிலி,B
3. A அல்லது B
4. Aயும் இல்லை Bயும் இல்லை.

(38) நீரில் காணப்படும் நுளம்புக் குடம்பிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மீன்களைப் பயன்படுத்துவது எப்போதும் பொருத்தமானதல்ல. அத்தகைய நீரில் நுளம்பைக் கட்டுப்படுத்தும் சிறந்த முறை,
1. நீருக்கு பூச்சிக் கொல்லிகளைப் பிரயோகித்தல்.
2. நீரில் உப்பைக் கரைத்தல்.
3. Bacilus Houringiensis ஐ நீரில் பிரயொகித்தல்.
4. நீருக்கு மண்ணெண்ணெய் தெளித்தல்.


(39) புளோரைடு கொண்டுள்ள பற்பசையைப் பயன்படுத்தல் தொடர்பான சரியான கூற்று,
1. இலங்கையின் சகல பிரதேசங்களிலும் மக்களுக்குப் பொருத்தமானது.
2. இலங்கையின் சில பிரதேசங்களிலுள்ள மக்களுக்குத் தேவைப்படுகின்றது.
3. நாட்டின் எப்பகுதியிலும் வாழும் மக்களுக்குத் தேவைப்படாது.
4. புளோரைட்டினால் பற்சிதைவு ஏற்படுத்தப்படலாம்.

(40) முருகைக்கற்களுக்கும் சுனாமி அழிவுக்கும் தொடர்புகள் பற்றிய சரியான கூற்று,
1. முருகைக்கற் பாறைகள் அகழ்வதால் சுனாமி ஏற்படுகிறது.
2. சுனாமி காரணமாக முருகைக்கற் பாறைகள் அழியும்.
3. இங்கு காணப்படும் முருகைக்கற்கள் சுனாமி ஏற்படுவதைத் தடைசெய்யும்.
4. சுனாமிக்கும் முருகைக்கற்களுக்கும் இடையே தொடர்பு கிடையாது. வேறு சில காரணங்களினால் சுனாமி உண்டாகின்றது.

# நோய்களைக் காட்டிக் கொடுக்கும் அறிகுறிகளை வாயில் காணலாம்

டாக்டர் எனக்கு வயிறு வலிக்கிறது என்று நோயாளி சொன்னால் வாயை நன்றாக திறவுங்கள் என்பார். வயிற்றில் வலி என்றால் வாயை காட்டு என்று சொல்கிறாரே என்று கடுப்பாக சிலர் முணுமுணுப்பர்.

இப்படி சம்பந்தம் இல்லாமல் டாக்டர்கள் பரிசோதிப்பது, பார்ப்பதற்கு வேண்டுமானால் அர்த்தமில்லாமல் இருப்பதாகத் தோன்றும். ஆனால் டாக்டருக்கு தான் தெரியும்.



எதனால் இந்த கோளாறு வந்துள்ளது என்று. முன்பெல்லாம் பல் வலிக்கிறது... ஆடுகிறது, ஈறுகளில் வலி என்றால், பல் டாக்டர், அதற்கு மட்டும் சிகிச்சை செய்வார். ஆனால் இப்போது பல நோய்களை காட்டிக் கொடுக்கும் அறிகுறிகளை வாயில் காண முடியும்.

ஆம் அமெரிக்க பல் மருத்துவ நிபுணர் ஜோசப் கிராபிட்ஸ், முதன் முதலில் 2003 இல் இதுபற்றி பரபரப்பான தகவல்களை வெளியிட்டதும், அமெரிக்க சத்திர சிகிச்சை நிபுணர் ஜெனரல் ரிச்சர்ட் கார்மோனா உள்ளிட்ட பல்வேறு மருத்துவ நிபுணர்கள் இதுபற்றி தீவிரமாக ஆராய்ச்சிகளை செய்தனர்.

அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பல்வேறு நோய்களை கண்டறிய வாயை முக்கிய அறிகுறியாக டாக்டர்கள் பயன்படுத்துகின்றனர். வாயை சோதித்த பின் தான், மற்ற சோதனைகளை செய்ய சொல்கின்றனர்.

வாயை சோதித்தால் மூன்று வகையில் அறிகுறி தெளிவாக தெரிந்து விடும். ஒன்று வாய் நாற்றமெடுப்பது, இரண்டாவது பற்களின் சாயம் மாறுவது ; மூன்றாவது, ஈறுகளில் பாதிப்பு. இந்த மூன்று அறிகுறிகளில் ஒன்று காட்டிக் கொடுத்தாலும் உடனே டாக்டர் உஷாராகி விடுவார்.

அறிகுறி காட்டிக் கொடுத்த பாதிப்பு தொடர்பான பரிசோதனைகளை செய்ய சொல்வார். இரத்த அழுத்தம் இருப்பதற்கான அறிகுறி தெரிந்தால் அந்த பரிசோதனை செய்து உறுதி செய்வார்.

அதுபோல சர்க்கரை நோய் முதல் பெண்களுக்கு கருத்தரிப்பு வரை கூட வாய் மூலம் அறிகுறிகள் தெரியும்.

சில நோய்களை வாய்வழி நாற்றத்தை வைத்து கண்டுபிடித்து விடலாம். சில நோய்களுக்கு ஈறுக்ளில் உள்ள சிறிய புள்ளிகள், வீக்கம் அறிகுறிகளாக பயன்படுகின்றன. அமெரிக்க நிபுணர் கிராபிட்ஸ் இது தொடர்பாக ஆயிரக்கணக்கான நோயாளிகளை பரிசோதித்து இதை வகைப்படுத்தியுள்ளார்.

### இதய பாதிப்பு

இதய பாதிப்புக்கு முக்கிய காரணம் இரத்த அழுத்தம் தான் பற்களை தாங்கியுள்ள ஈறுகளில் கருஞ் சிவப்பு நிறம் ஏறியிருந்தால் உஷாரடைந்து விட வேண்டும். சிலருக்கு சிவப்பும், நீலமும் சேர்ந்த நிறமாக சாயம் இருக்கும். உடனே அழுத்தத்தை பரிசோதிக்க வேண்டும். அப்படி செய்தால் இரத்த அழுத்தம் தெரிந்து விடும்.

### சர்க்கரை நோய் - வகை 2

பற்களை பாதுகாக்கும் ஈறுகளில் அழுக்கு படிந்து தடிமனாக படிமம் ஆகி, கடைசியில் ஈறுகளில் இரத்தக் கசிவு ஏற்படும். இப்படி எந்த பாதிப்பும் இல்லாமல் ஈறுகளை தொட்டால் உடனே இரத்தக்கசிவு ஏற்பட்டால் உஷாராகி விட வேண்டும். ஆம். அது தான் வகை 2 சர்க்கரை நோய் வந்துள்ளதற்கான அறிகுறி.



### சிறுநீரக பாதிப்பு

வாய் வழி மூச்சு விட்டால் இனிப் பான அமோனியா வாயு வெளி வரும். இதை டாக்டரால் தான் உணர முடியும். இப்படி இருந்தால் சம்பந்தப்பட்ட நோயாளிக்கு சிறுநீரக கோளாறு உள்ளதாக கண்டு கொள்ளலாம். சிறுநீரக சோதனையை உடனே செய்ய வேண்டும். அலட்சியப்படுத்தக் கூடாது. தாமதிக்கவும் கூடாது.

### அமில பாதிப்பு

பற்களை தாங்கியிருக்கும் சதைப்பற்று பகுதியில் ஒரு வித அமிலம் பரவி இருக்கும். அதுதான் பற்களை தாங்கியிருக் கிறது. இதில் ஏதாவது பாதிப்பு வந்தால் அமில குறைபாட்டால் தான் ஏற்படும். அதையும் பற்கள் காட்டிக் கொடுத்து விடும்.

### வாய்வழி புற்றுநோய்

பற்களின் ஈறுகளின் ஊடே உள்ள சதைப் பற்றில் வெள்ளை புள்ளி இருந்தால் இதில் உடல் கோளாறு இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். இந்த வெள்ளைப் புள்ளியை டாக்டர் கண்டுபிடித்து விடுவர்.

### இரத்தப் புற்று நோய்

வீக்கம் அடைந்து சிவப்பு நிறமேறிய ஈறுகளில் வலி இருக்கும். இரத்தக் கசிவும் ஏற்படும். சர்க்கரை நோய்க்கான அறிகுறியை விட இது வித்தியாசமாக இருக்கும். அப்படி இரண்டு வாரம் நீடித்தால் இந்த கோளாறு தான் என்று உறுதி செய்து கொள்ளலாம்.

### எலும்பு நோய்

எலும்புகளை பாதித்து பலவீனப்படுத்தும் நோய்க்கு பற்களில் கரும்புள்ளிகள் தான் அடையாளம். பற்களில் எக்ஸ்ரே எடுத்தால் இதை கண்டுபிடித்து விடலாம்.

### மன அழுத்தம்

மன அழுத்தத்தை கூட வாய் வழியாக கண்டுபிடித்து விட முடியும். எப்படி தெரியுமா? பற்கள், ஈறுகளில் கீறல், சேதம் என்று பலவீனம் இருந்தால் மனது சரியில்லை என்று பொருள்.

### தூக்கமின்மை


தூக்கமில்லாமல் அடிக்கடி கொட்டாவி விடுவது, குறட்டை விடுவது போன்றவை காரணமாக நாக்கு சற்று வீக்கம் கண்டது போல இருக்கும். அதுபோல ஈறுகளிலும் பல்வீனம் தெரியும்.

### கருத்தரிப்பு

கருத்தரிப்பு ஏற்படப் போகிறது என்றால் பெண்களின் சுரப்பிகளில் மாற்றம் இருக்கும். அதை ஆழமாக வீங்கி இருக்கும் ஈறுகள் காட்டிக் கொடுத்துவிடும்.

இந்த அறிகுறிகளை கண்டுபிடிக்க அனுபவம் வாய்ந்த பல் டாக்டர் பத்து நொடிகள் பரிசோதித்தாலே போதும்.

# கொலஸ்ட்ரால் பரிசோதனைக்கு முன் சாப்பிடாமல் இருக்க வேண்டுமா?



இதய பாதிப்புக்கு காரணமான கொலஸ்ட்ரால் என்ற கொழுப்பு இருக்கிறதா என்பதை அறியும் சோதனையை செய்யும் முன் சில மணி நேரம் சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்று சொல்வது சரி தானா என்ற கேள்வி இப்போது மருத்துவ உலகில் எழுந்துள்ளது. லண்டனில் உள்ள தேசிய ஆராய்ச்சி மைய நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் இந்த உண்மை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதய நோய்க்கு காரணமானது கொலஸ்டால் என்ற கொழுப்பு சத்து. நாம் சாப்பிடும் உணவுப்பொருட்கள், நம் பழக்க வழக்கங்கள் காரணமாக உடலில் உள்ள இதய இரத்தக் குழாய்களில் உட்பகுதி சுவரில் படிந்து, அதை அடைத்து விடுகிறது. இதனால் இரத்தம் சீராக போவது தடுக்கப்பட்டு இதயம் பாதிக்கப்படுகிறது.

உடலில் கொலஸ்ட்ரால் அளவு எவ்வளவு என்பதை கண்டறிய பரிசோதனை செய்யப் படுகிறது. பரிசோதனை செய்யும் முன், குறிப்பிட்ட சில மணி நேரம் உணவு சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் சொல்லி வந்தனர்.

இதய பாதிப்பு உள்ளவர்கள் மாதந்தோறும் கொலஸ்ட்ரால் பரிசோதனை செய்து கொண்டு வருகின்றனர். அவர்கள் இந்த முறைப்படி தான் உணவுக் கட்டுப்பாட்டுடன் பரிசோதனை செய்து கொள்கின்றனர். லண்டனில் உள்ள நிபுணர்கள் ஆய்வில், உணவுக்கட்டுப்பாட்டுக்கு பின் சில நோயாளிகளிடம் பரிசோதனை செய்யப்பட்டது. சிலருக்கு உணவுக் கட்டுப்பாடு இல்லாமலேயே பரிசோதனை செய்யப்பட்டது. இரண்டிலும் எந்த வேறுபாடும் இல்லை என்பதை நிபுணர்கள் உறுதி செய்தனர். இவர்களின் ஆராய்ச்சியால் கொலஸ்ட்ரால் பரிசோதனைக்கு முன் குறிப்பிட்ட மணி நேரம் சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்று நோயாளிகளிடம் சொல்வது சரி தானா என்ற கேள்விக்குறி டாக்டர்களிடம் எழுந்துள்ளது.




# உடலில் எரிகாயம் ஏற்பட்டால்...



உடலில் எரிகாயம் பட்டால் உடனே ஒயின்ட்மென்டை தேடாதீர்கள். சாதாரண அடுப்பு சூடு பட்ட காயம், எரிகாயம் என்றால் காயம் பட்டவுடனேயே என்ன செய்ய வேண்டும் தெரியுமா?

எவ்வளவு சொல்லியும் பலரும் ஒரே தவறை செய்வார்கள். அது தான் மருந்து போடுவது அதை செய்யவே கூடாது.

காயம் பட்டவுடன் குளிர்ந்த தண்ணீரில் மூழ்க விட வேண்டும். குறைந்த பட்சம் 10 நிமிடமாவது அப்படியே இருக்க வேண்டும்.


அதன் பின் பெரிய காயம் என்று நினைத்தால் டாக்டரிடம் காட்டலாம். மற்றபடி வீட்டு வைத்தியம் எதுவும் செய்யக்கூடாது. காயம் தான் அதிகமாகும்!

# உப்பைக் குறைத்தாலே போதும்

இரத்த அழுத்தம் வந்து விட்டது என்று டாக்டர் சொல்லிவிட்டாரே என்று கவலையில் மூழ்கி விட வேண்டாம்.

உப்பைக் குறைத்தாலே போதும். இதுதான் டாக்டர்கள் சொல்லும் முதல் ஆலோசனை.

உணவில் சேர்க்கப்படும் உப்பைக் குறைக்கலாம். அதேபோல் மேசையில் வைத்து சிலர் உணவில் உப்பு சேர்த்துக் கொள்வர் அதை அறவே நிறுத்த வேண்டும்.



# அரசாங்க அலுவலர்களுக்கான சொத்துக்கடன்

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 15/2007(1)

அரசாங்க அலுவலர்களுக்கு வங்கிகள் ஊடாக சொத்துக்கடன் மற்றும் வாகனக் கடன் வழங்குதல் தொடர்பாக வெளியிடப்பட்ட 2007யூன் மாதம் 12 ஆம் திகதிய 15/2007ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பால் தங்களது கவனம் ஈர்க்கப் படுகிறது. அதில் இலக்கம் 01 இன் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்துக்கடன் தொடர்பான ஏற்பாடுகள் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் செய் யப்படுகின்றன.

01.சொத்துக்கடன்

1.1 கடன்களுக்கான பரிந்துரைகளையும் அங்கீகாரத்தையும் மேற்கொள்ளும் போது பின் குறிப்பிட்டுள்ளவாறு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

அ.கடன் விண்ணப்பதாரருக்கு அல்லது வாழ்க்கைத்துணைக்கு வீடொன்று அல்லது காணியொன்று இல்லாதவிடத்து காணியொன்றை வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு அல்லது வீடொன்றை நிர்மாணிப்பதற்கு.

ஆ.கடன் விண்ணப்பதாரருக்கு அல்லது வாழ்க்கைத்துணைக்கு காணியொன்று உரித்தாக இருப்பினும் , அவர்களுக்கு வீடொன்று இல்லையெனில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு அல்லது வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கு.

1.2.ஏற்புடைய கடனுக்கான வட்டியைத் தீர்மானித்தல்.

2009 நவம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய திருத்தம் செய்த வட்டி வீதம், அரசாங்கம் செலுத்த வேண்டிய வட்டி வீதம் மற்றும் வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய வட்டி வீதம் ஆகியன கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| கடன் தொகை | அலுவலரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500,000/- வரை | 4 % | 8 % | 12 % |
| ரூபா. 500,001/- தொடக்கம் ரூபா 1,000,000 வரை | 8 % | 4 % | 12 % |
| ரூபா. 1,000,001/- தொடக்கம் ரூபா 3,000,000 வரை | 11 % | 3 % | 14 % |

02. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 15/2007இல் பந்தி 03 இல் குறிப்பிட்டுள்ளவாறு பொதுவான விடயங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப் படுகின்றன.

03. பொது விடயங்கள்

அமைச்சுக்கள் , திணைக்களங்கள் கடனுக்கான விண்ணப்பங்களை வங்கியிடம் பரிந்துரை செய்தல் மற்றும் வங்கிக்கடன் தொகையை அங்கீகரித்து விடுவித்தல் என்பவற்றின்போது பின் குறிப்பிடும் விடயங்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

I.தாபன விதிக்கோவையில் அத்தியாயம் XXIV இல் பிரிவு 11 இன் கீழ் சொத்துக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க வங்கிகளிடம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்காக இதுவரை கடன் பெறாது காத்திருப்போர் பட்டியலில் நிரலில் எவரேனும் ஒரு அலுவலர் இருப்பாராயின் , மேலும் தமது கடன் விண்ணப்பப்படிவம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமா என்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலரால் இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் 14 நாட்களுக்குள் திணைக்களத் தலைவர்ஊடாக குறித்தகடனுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த வங்கிக் கிளையின் முகாமையாளரிடம் அறிவித்தல் வேண்டும்.

II. 2009 நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்படும் அரசாங்க அலுவ

## திருத்தியமைக்கப்பட்ட சுற்று நிரூபம்

லர்களின் சொத்துக்கடனுக்கான மேற்படி வட்டி வீதங்கள் வலுவிலிருப்பதுடன் இத் திகதிக்கு முன்னதாக பெற்றுள்ள கடன் தொடர்பில் தற்போது அறவிடப்படும் வட்டி வீதங்கள் மேலும் அவ்வாறே செல்லுபடியாகும்.

III . தற்போதைக்கும் அலுவலர் ஒருவரால் விண்ணப்பம் செய்து , வங்கிகளில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள கடன் தொகை தொடர்பில் இடைக்காலப்பகுதியில் சம்பள அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பித்த கடன் தொகையை அதிகரிப்பதற்கு இடமளித்தலாகாது.

IV. இச் சுற்றறிக்கையின் கீழ் கடன் தொகை வழங்கும் போது சம்பந்தப்பட்ட அலுவலர் தற்போது பெறுகின்ற சம்பளம் தொடர்பான விபரம் ஒன்றை திணைக்களத்து தலைவர் ஊடாக வங்கியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

V. கடன் விண்ணப்பம் ஒன்று வங்கியிடம் கையளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தாம் சேவையாற்றிய இடத்தில் இருந்து வேறு ஒரு இடத்திற்கு அலுவலர் இடமாற்றம் பெற்றிருப்பின் ஏற்புடைய கடன் விண்ணப்பப்படிவம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புதிய சேவை நிலையத்தின் தலைவரது இணக்கம் தெரிவிக்கும் கடிதம் ஒன்றையும் வங்கியில் கோருகின்ற வேறு ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

VI.கடன் விண்ணப்பப்படிவத்தை கையளிக்கின்ற சந்தர்ப்பத்தில் அலுவலர் ஒருவரால் வங்கியிடம் செலுத்தப்படவேண்டிய ரூபா 7500 அல்லது கடன் தொகையில் ஒரு வீதமாகிய இரண்டில் குறைவான தொகையை கடன் விண்ணப்பங்களை ஒழுங்குபடுத்துவதற்கான கட்டணமாக கடன் பெறுநரின் விருப்பப்படி பணமாக செலுத்தப்படுவதற்கு அல்லது கடன் தொகையின் பொருட்டு செலுத்தப்படும் முதலாவது தவணைக்கட்டணத்தில் இருந்து. குறைப்பதற்கு அல்லது கடன்தொகையில் தவணைக்கட்ட ணங்களில் உள்ளடக்கி மாதாந்த தவணைக்கட்டணமாக அறவிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

VII. ரூபா 500,000 க்கு அதிகமான கடன் தொகையை விண்ணப்பித்திருப்பினும் கடன் தொகையை துரிதமாக பெற்றுக்கொள்ளும் நோக்கில் குறித்த கடன் தொகையை சுய விருப்பத்தின் அடிப்படையில்ரூபா 500 , 000 அல்லது அதற்குக்குறைந்த அளவில் வரையறைப்படுத்தி கடன் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள் இருப்பார்களாயின் அவர் களின் தேவையின் பொருட்டும் வங்கியால் மேற்கொள்கின்ற வரையறைகளுக்கு அமைவாகவும் அவர்களுக்கான ஆகக்கூடிய கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன்படி அலுவலரால் மீதிக்கடன் தொகை கோருமிடத்து அக்கடன் தொகை அலுவலரிடம் வங்கியால் விடுவிக்கப்படும் இடத்து வங்கியால் அதனை புதிய கடன் தொகையாக கருத முடியும் எனினும் அலுவலர் முன்னதாக பெற்றுக்கொண்ட கடன் தொகை மற்றும் இதன் கீழ் பெற்றுக்கொள்கின்ற நீதிக்கடன் தொகை என்பனவற்றை ஒரே கடன் தொகையாகக் கருதி இச் சுற்றறிக்கையில் ஏற்புடைய வட்டி வீதங்கள் அதன் பிரகாரம் அறவிடப்படும்.

VIII. கடன் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அரசாங்க ஈட்டு முதலீட்டு வங்கி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் ஆகியவற்றிடம் தமது கடன் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்து காத்திருப்போர் பட்டியலில் இருந்த அரசாங்க அலுவலர்கள் அவர்களின்விண்ணப்படிவங்களைதிணைக் களத் தலைவர் ஊடாக மீளவும் மக்கள் வங்கி இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய வங்கிகளில் ஏதேனும் ஒரு வங்கியிடம் தமது விருப்பத்திற்கு அமைய சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

03. சொத்துக்கடன் விண்ணப்பப் படிவங்களை வங்கியிடம் சமர்ப்பிக்கும் போது 2006.01.24 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் இலக்கம் 08/2005 (V) இல் திருத்தம் செய்யப்பட்ட ஸ்தாபன விதிக்கோவையில் அத்தியாயம் XXIV இல் உப பிரிவு 11.4.1 இல் ஏற்பாடுகளுக்கு அமைய அலு வலருக்கு பெற முடியுமான ஆகக்கூடிய கடன் தொகை அலுவலரின் படிகள் தவிர்ந்த ஏழு ஆண்டுகளிலான திரட்டிய சம்பளம் அல்லது ரூபா 3, 000,000 ஆகிய இரண்டில் குறைந்த தொகையாகும்.

04.வாகனக் கடன் விண்ணப்பங்கள் தொடர்பில் 2007ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் தேசிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 15/2007இல் பந்தி இலக்கம் 02இல் வாகனக்கடன் என்பதை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அச் சுற்றறிக்கையில் பந்தி இலக்கம் 3 இன் பொது விடயங்கள் என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ள உப பந்தி (இ)யின் ஏற்பாடுகள் அவ்வாறே வலுவில் இருக்கும்.

05. மேற்படி ஏற்பாடுகளுக்கமைய தாபன விதிக்கோவையில் அத்தியாயம் XXIV இன் கீழ் ஏற்புடைய பிரிவுகள் திருத்தம் செய்யப் படுகின்றன.

6.பொதுதிறைசேரியின் இணக்கத்துடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

செல்வகுமரன்

# சரத்பொன்சேகா விடுதலைப்புலிகளுக்கு ஒட்சிசன் வழங்க முற்படுகின்றாரா

## அரசாங்கம் அதிருப்தி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்திற்கு அரசாங்கம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்தவர்களும் தமக்கு வாக்களிக்க முடியும் என ஜெனரல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார் எனவும் இது ஓர் பாரதூரமான கூற்று எனவும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தலில் யார் ஆதரவு வழங்கினாலும் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதாகவும் விடுதலைப்புலி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பிரபாகரனின் பெற்றோர் ஆதரவு வழங்கினாலும் ஏற்றுக்கொள்ளப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை விடுதலைப்புலிகளிடமிருந்து பாதுகாத்ததாகத் தெரிவித்துக்கொள்ளும் ஓர் இராணுவ ஜெனரலிடமிருந்து இவ்வாறான ஓர் கூற்றை எதிர்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதியோ அல்லது மக்களோ இதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் எனவும் ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஜெனரல் பொன்சேகாவின் கொள்கை இதுவென்றால் மிகவும் ஆபத்தான ஓர் நிலையை ஏற்படுத்தக்கூடுமென குறிப்பிட்ட அவர் ,

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பீனிக்ஸ் பறவைக்கு நிகரானது எனவும் மீண்டும் உயிர்த்தெழ சந்தர்ப்பம் பார்த்து காத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஓர் நிலைமையின் கீழ் ஜெனரல் சரத் பொன்சேகா விடுதலைப்புலிகளுக்கு ஒட்சிசன் வழங்க முயற்சிக்கின்றாரா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் இந்தக் கூற்று பல்வேறு தியாகங்களையும் அர்ப்பணிப் புக்களையும் செய்த ஆயிரக் கணக்கான படைவீரர்களுக்கு இழைக்கும் துரோகமாகும் எனவும் தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வது சட்டத்திற்கு முரணானதென்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான கொள்ளைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் ஆதரவு வழங்குமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(ஓ-6)

## விநாயக விரத இலட்சார்ச்சனை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

இருபாலை தென்கோவை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் ஆலய விநாயகர் விரத இலட்சார்ச்சனை பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இருபது தினங்கள் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் தொடக்கம் தினமும் மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், பூஜைகள், பிள்ளையார் கதைப்படிப்பு என்பன நடைபெறும். எதிர்வரும் 5ஆம் திகதி சனிக் கிழமை மாலை 5 மணிக்கு சங்கடஹர சதுர்த்தி உற்சவமும், 21 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கஜமுக சங்காரமும் , 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விநாயக சஷ்டியும் இலட் சார்ச்சனை பூர்த்தியும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 23 ஆம்திகதி புதன் கிழமை முதல் அதிகாலை 5.30 மணிக்கு திருவெம்பாவை பூஜைகள் இடம்பெறவுள்ளது. (6-9)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 3 விதி எண் : 7

பிறந்த எண் 3, விதி எண் 7 ஆகப் பிறந்தவர் குரு, கேதுவின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் உயரமானவர்களாக இருப்பர். கவர்ச்சியாகத் தோற்றமளிப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் மனபலம் மிக்கவர்கள், அதிக தைரியமும் கொண்டவர்களாக இருப்பர். தன்னை விட பலவானிடம் கூட மோதிப் பார்ப்பர். அந்த அளவுக்கு துணிச்சலும், முயற்சியும் கொண்டவர்களாக இருப்பர்.

இவர்கள் பிறரிடம் காணும் சிறு தவறுகளைக் கூட வெளிப்படுத்தி பெருமளவு விமர்சனம் செய்வர். அதனால் இவர்களை நெருங்கவே பிறர் அஞ்சுவர்.

இவர்களுக்கு நண்பர்கள் இருப்பது கடினம். இவர்களிடம் பிறர் மனம் விட்டுத் தாராளமாகப் பழக மாட்டார்கள். தனிமை விரும்பிகளாகவே இருப்பர். எப்போதும் எதையாவதொன்றைப் பற்றித் தனக்குத் தானே சிந்தித்துக் கொண்டிருப்பர்.

இவர்கள் பொறுமை இழந்தவர்களாகவும், எளிதில் கோபத்திற்கு ஆளாகக் கூடியவர்களாகவும் இருப்பர். இவர்களுக்குப் புதுமையுடன் பழைமையையும் போற்றும் குணம் இருக்கும்.

இவர்கள் சாதாரணமாகப் பேசமாட்டார்கள். தங்களுக்கு ஒரு நெருக்கடி வந்துவிட்டால் எந்த வகையிலாவது பேசிச் சமாளித்துக் கொள்வர். இவர்கள் தம் இனப்பற்று, மதப்பற்று, நாட்டுப்பற்று என்று எல்லா வகைப் பற்றும் கொண்டவர்களாக அதன் உயர்வுக்குப் பாடுபடுவதாக கூறிக் கொள்வர். ஆனால் அவர்கள் விரைவில் தளர்ந்து பின்வாங்கிக் கொள்வர்.

எப்போதும் எதிலும் குழப்பம் மிகுந்தவர்களாகவே இருப்பர். பிறரிடம் தன் குழப்பத்துக்குத் தெளிவு பெற வேண்டுமே என்று எண்ணாது, தனக்குத் தானே கேட்டை விளைவித்துக் கொள்வர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு குடும்ப வாழ்க்கை நன்றாக அமைந்தாலும் அதைக் காப்பாற்றிக் கொள்ள மாட்டார்கள். மற்றவர் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதிலேயே கவனம் செலுத்துவர். அதனால் அடிக்கடி பிரச்சினைகள் தோன்றிய வண்ணமிருக்கும். ஜாதகரும் தனிமையை விரும்புவராக இருப்பதால் அவரும் ஒதுங்கி வாழ்வார்.

### தொழிலும், வருமானமும்

இவர்களுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணி புரிவதுதான் பொருந்தும். அது தவிர கலைத் தொடர்பில் சுதந்திரமாக ஈடுபடலாம். எழுதுவது, வரைவது போன்றவற்றில் சிறப்படைவர். அந்த அளவுக்கு கற்பனை வளமும், சிந்தனை ஆற்றலும் பெற்றவர்.

அவை தவிர, சொந்தமாக இரசாயனப் பொருள், மருந்து, கல் போன்றவற்றைத் தயாரித்து வியாபாரம் செய்யலாம். ஆனால் பேச்சு இவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாகவும், தொழில் விருத்தியடையாமலும் போகும். பொருளாதாரத் துறையிலும் பெரும் உயர்வு பெறுவது அரிது.

### ஆரோக்கியநிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதியாலும், வாயுத் தொல்லையாலும் அது தொடர்பான பாரிச வாயு வரும். வயிற்றுவலி, காய்ச்சல் போன்றன உண்டாகும். மூட்டு வலியும், நீர் சம்பந்த நோய்களும் ஏற்பட வாய்ப்புண்டு.

### சாதக, பாதக எண்களும், திகதியும்

இந்த வகையினர் 3,5 க்குரிய குரு, புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட எண்களில் யோகமானதையும், தனக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம்.

தம் நிறுவனத்திற்குக்கூட இந்த எண்களுக்கே மாற்றம் செய்து கொள்ள யோகமாகும்.

எண்களில் குரு, சந்திரன் ஆதிக்கம் பெற்ற 3,2 யோகமானவை. இந்த எண்களும் இதே எண்கள் தொடர்புடைய திகதிகளும் யோகமானவை. இவை தவிர, 5 தொடர்புடைய திகதிகளும் யோகமளிக்க வல்லவை. ஆனால் சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 ஆவது தொடர்புடைய எண்களும், திகதிகளும் யோகமற்றவை.

## உடல் எண் : 3 விதி எண் : 8

### உடலமைப்பு

பிறந்த எண் 3 விதி எண் 8 ஆகக் கொண்டவர்கள் குரு, சனி ஆகியவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் நடுத்தர உயரமுள்ளவர்களாக இருப்பர். சதைப் பற்றும் அளவாக இருக்கும். கம்பீரமாகத் தோற்றமளிப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் தைரியமிக்கவர்கள். எதையும் துணிச்சலுடன் செய்து விடுவர். இருந்தாலும் சில நேரங்களில் தைரியமிழந்து விடுவர். இதுவே இவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாகும்.

தன்னம்பிக்கை கொஞ்சமும் இல்லாதவர்கள், பிறரையும் நம்பமாட்டார்கள். மற்றவர் தனக்குக் கேடு விளைவித்து விடுவார்களீ என்ற சந்தேகம் மிகக் கொண்டிருப்பர்.

இவர்கள் அனுபவசாலிகள். உலக நடைமுறை எல்லாமே தெரியும். ஆனால் தான் வாழவேண்டிய முறைதான் என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

ஒரு காரியத்தை ஆர்வமுடன் சுறுசுறுப்புடன்ஆரம்பித்து செய்வர். அது முடியப் போகும் நேரத்தில் சோர்வும், அவநம்பிக்கையும் கொண்டிடுவர். அந்த அளவுக்கு நம்பிக்கையுடன் எதையுமே செய்யமாட்டார்கள். சின்ன விடயங்களுக்குக் கூடப் பெருமளவு அவநம்பிக்கை கொள்வார்.

தனக்கு சகலமும் தெரியும் என்று பொதுநலச் சேவையில் பங்கு கொள்வர். பல பொறுப்புகளை ஏற்றுக் கொள்வர். இவர்கள் நேர்மையாகப் பாடுபட்டாலும் பழிச்சொல் ஏற்கவும் நேரும்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு ஆரம்ப வாழ்க்கை போராட்டம் மிகுந்ததாக இருந்தாலும், போகப் போக முன்னேற்றமாக இருக்கும். இருந்தாலும் இவர்களிடமுள்ள அவநம்பிக்கையால் குடும்பத்தில் பிரச்சினைகளைத் தோற்றுவித்து சலசலப்பை ஏற்படுத்தச் செய்யும்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கக்கூடியவர்கள். உண்மையாக உழைப்பவர். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணி புரிவர். இவர்களுக்குப் போதிய வருமானம் இல்லாததால் சொந்தத் தொழிலில் ஈடுபடுவர். இவர்களுக்குப் பொறியியலில், இரும்பு, எந்திர வண்டி வாகனத்துறையில் பணியும், அது தொடர்பான சொந்தத் தொழில் புரிபவராகவும் இருப்பர். கமிஷன் ஏஜெண்டுகளாகவும் இருக்கக்கூடும்.

இவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பர். தொழில் கல்வியில் பட்டம் பெற்றிருக்கக்கூடும். அது தொடர்பான தொழிலும், கலை தொடர்பாக எழுதுதல், பேசுதல் போன்றவற்றிலும் சிறப்புற்றிருப்பர்.

இவர்களைச் சிக்கனமானவர்கள் என்று கூறுவர். இவர்கள் தங்கள் வரைக்கும் சிக்கனமாகவே இருப்பர். ஆனால் வரவுக்கு மீறிய செலவுகள் செய்ய வேண்டிய நிலை குடும்பத்திலும், தொழிலிலும் ஏற்படும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு மூட்டுவலி, வயிற்று வலி மற்றும் நீர் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படக்கூடும். வாய்வுத் தொல்லையாலும் பல நோய்களுக்கு ஆளாவர்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் குரு, புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 3,5 தொடர்புடையவற்றில் பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம். சூரியனின் ஆதிக்கம் பெற்ற 1 கூட இவர்களுக்கு சிலாக்கியமானதே. ஆனால் யோகமான பலன்கள் தரும் கூட்டு எண்களுக்கு பெயர் மாற்றம் செய்து கொள்ள நன்மை பெறலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 3, 5,1 தொடர்புடையவற்றில் எது நமக்குப் பொருந்துமோ அது யோகமான பலன் தரக்கூடிய எண்களுக்குப் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

இவர்களுக்கு 3,5 இவற்றை அதிர்ஷ்ட எண்களாகவும் 3,5,1 தொடர்புடைய திகதிகளே யோகமானவையாகவும் கூறலாம்.

ஆனால் சுக்கிரன், சனி ஆதிக்கத்திற்குட்பட்ட 6,8 அது தொடர்புடைய எண்களும், திகதிகளும் யோகமற்றவை. (தொடரும்)

## பச்சிளம் சிசுவை விற்பனை செய்த குற்றச்சாட்டில் மருத்துவர் உட்பட மூவர் கைதாகினர்

### மன்னாரில் சம்பவம்

(கொழும்பு)

மன்னார் பிரதேசத்தில் 7 நாட்களேயான சிசு ஒன்றை பணத்திற்காக விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த சந்தேக நபர்களில் மருத்துவர் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தை ஒன்றே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

காய்ச்சல் காரணமாக குறித்த குழந்தையை தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதித்ததாகவும், அந்தக் குழந்தையை மருத்துவர் உள்ளிட்ட மூவர் விற்பனை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிசு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெற்று வந்த சந்தர்ப்பத்தில் உயிரிழந்து விட்டதாக மருத்துவர் தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த குழந்தை வத்தளைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஓ-6)

## கராப்பிட்டிய வைத்தியசாலையைச் சேர்ந்த 5 மருத்துவர்கள் பன்றிக் காய்ச்சலால் பாதிப்பு

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த ஐந்து மருத்துவர்கள் பன்றிக் காய்ச்சல் நோய் வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோயினால் பாதிக்கப்பட்ட ஐந்து மருத்துவர்களும் சிகிச்சைகளின் பின்னர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் இருவர் வீட்டிலேயே சிகிச்சை பெற்று வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

முகக் கவசங்களுக்கு காணப்படும் பற்றாக்குறையினால் தமக்கு நோய்த் தொற்று ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக கராபிட்டிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவர்கள் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தனர்.

பன்றிக் காய்ச்சல் நோயாளிகளுக்கு தனியான விடுதி இல்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததென மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-6)

## இம்முறை க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு முகாம்களில் உள்ள 4 ஆயிரம் மாணவர்கள்

(கொழும்பு)

இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ள சுமார் 4 ஆயிரம் மாணவ மாணவியர் இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சையில் தோற்றுவதற்காக வவுனியா உள்ளிட்ட இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ள 4 ஆயிரம் மாணவ மாணவியரிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டை விநியோகம் நேற்றைய தினம் முதல் நடைபெறுகின்றது என வவுனியா கல்வி வலயப் பணிப்பாளர் ஒஸ்வேல்ட் தெரிவித்துள்ளார். வவுனியா பாடசாலைகள் மற்றும் இடம் பெயர் முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள விசேட பரீட்சை நிலையங்களின் ஊடாக மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

வவுனியாவில் மொத்தமாக 56 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## பொன்சேகாவின் கேள்விகளுக்கு ஊடகங்கள் மூலம் பதிலளிக்கப்படும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான கேள்விகளுக்கு பதிலளிக்கத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னாள் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவினால் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களின் ஊடாகவே அரசாங்கமும் சரத் பொன்சேகாவின் கேள்விகளுக்கு பதிலளிக்கத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

சரத் பொன்சேகாவின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் பொறுப்பை சில அமைச்சர்களிடம் அரசாங்கம் ஒப்படைத்துள்ளதாக பாதுகாப்புப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் நாட்களில் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கேள்விகளுக்கு அரசாங்கத் தரப்பு பதில்களை எதிர்பார்க்க முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-6)

பூனை முட்டாளாக இருந்தால் எலி அதனை விரட்டி அடித்து விடும்.
~இலங்கை

வலம்புரி

## தோற்றவர்களைவிட வென்றவர்களே அதிகம் துன்பப்படுவார்கள்

பூச்சியத்திற்குள்ளே ஒரு இராச்சியத்தை ஆண்டுகொண்டு புரியாமலே இருப்பான். அவனைப் புரிந்து விட்டால் அவன்தான் இறைவன்.

இந்த தத்துவம் இலங்கைத் தீவில் புரியப்படாத விடயமாகவுள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றை ஆராய்ந்து உரிய புள்ளிகளை இணைத்துப் பார்த்தால் தமிழர்களுக்கு அநீதி செய்த அத்தனை ஆட்சித் தலைவர்களும் தமது இறுதிக்காலத்தில் அவலப்பட்டனர் என்ற உண்மையை அறியமுடியும்.

1983களில் கறுப்பு ஜூலையைத் தந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தன்னோடு இருந்த ஆர்.பிரமதாசவுக்கு பயந்து வாழ்ந்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை இலங்கைக்கு அறிமுகம் செய்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவே பயந்து வாழும் அளவில்தான் இலங்கையின் ஆட்சிச் சிறப்பும், ஜனநாயக மதிப்பும் இருந்தது.

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனக்கு அடுத்ததாக காமினி திஸநாயக்கவை அல்லது லலித் அத்துலக்முதலியை ஜனாதிபதியாக்க வேண்டும் என நினைத்தார்.

அவரின் நினைப்பிற்கு இயற்கையும் ரணசிங்க பிரேமதாசவும் இடம்தரவில்லை.

தனது தனிப்பட்ட நடவடிக்கை மூலமாக பிரேமதாச ஜனாதிபதிப் பதவியை பெற்றுக் கொண்டார்.

அவரின் மறைவுக்குப் பின்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற மனநிலை தென்பகுதியில் ஏற்பட்டது.

இதன் காரணமாக நான் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றால் இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண்பேன் என்று பிரசாரம் செய்த சந்திரிகா குமாரதுங்கவை இலங்கை மக்கள் ஜனாதிபதியாக்கினர்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்ற உத்வேகம் சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்ததும், அதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டதும் உண்மை.

இருந்தும் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் பாதுகாப்பு பிரதி அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தையின் கேடுதரும் ஆலோசனைகளுக்கு சந்திரிகா இசைந்தமையால் அவரின் ஓய்வு காலம் வெறுப்பையும், விரக்தியையும் வாரிக் கொடுத்தது.

இரண்டாவது தடவையாக பதவி வகித்த ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கும் எண்ணம் அறவே இருக்கவில்லை.

இருந்தும் தனது அரசியல் ஆளுமை காரணமாக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிவாகை சூடினார்.

ஜே.ஆருக்கு பிரேமதாச போல–சந்திரிகாவுக்கு மகிந்த ராஜபக்ஷ போல–மகிந்த ராஜபக்ஷவுக்கு எவருமில்லை என்ற நினைப்பு நீடிப்பதற்கு முன்னதாக ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் குதித்துள்ளார்.

முன்னைய இருவரும் ஒரே கட்சி சார்ந்தவர்கள். மகிந்த ராஜபக்ஷவுடன் போட்டியிடவுள்ளவர், இராணுவத்தளபதியாக இருந்தவர். எங்கே பார்க்கலாம். பூச்சியத்திற்குள்ளே இராச்சியத்தை ஆண்டு கொண்டு புரியாமல் இருக்கும் அந்த இறைவனின் திருவிளையாடலை.

# தீப ஒளியூடே ஆன்மீக ஒளி பரவட்டும்

பழமையும் புதுமையும் சிறப்பும் பொருந்தியது கார்த்திகைத் தீபத் திருநாள். இத் தீபத் திருநாளைக் குறித்து பல புராணச் செய்திகள் உள்ளன. அவற்றில் சில

நாரத முனிவர் கார்த்திகை விரதத்தை அனுஷ்டித்து ஏழுமா முனிவருக்கும் மேலாய சிறப்பை அடைந்தார் என்று கந்த புராணம் கூறும்.

மூன்று அசுரர்கள் தங்கம், வெள்ளி, இரும்பால் நகர்களை உருவாக்கி பெருவரங்களைப் பெற்று அட்டூழியம் செய்தனர். சிவபெருமான் புன்சிரிப்பால் அந்த திரிபுரங்கள் என்ற மூன்று கோட்டையையும் எரித்தார். இத் திருநாளும் இதுவே.


பிரம்ம விஷ்ணுக்களின் நடுவே ஆதியந்தம் அற்ற ஒளி வடிவாய் சிவனார் தோன்றிய நாளும் இதுவே. ஆறு குழந்தையாகி விளையாடிய முருகவேல் ஓருருவாகி ஆறுமுகப் பரம்பொருளானதும் இத் தினமே.

கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்ததால் முருகனுக்கு கார்த்திகேயன் என்றும் பெயர். மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரம் தோறும் முருகனாலயங்கள் விழாக் கோலம் பூணும். அவ்வாறிருக்க இது திருக்கார்த்திகை எனப் படுகின்றது.

மற்றைய ஆலயங்களில் பூரணை அன்று தீப விழா நடைபெறும். முருகனாலயங்களில் கார்த்திகைத் திருநா ளன்று இவ் விழா தனித்துவம் பேணிக் கொண்டாடுவர். இதை குமாராலய தீபம் என்பர். மற்றையது ஸர்வாலய தீபம் எனப் படும். இவ்வாண்டு இரண்டும் டிசெம்பர் ஓராம் திகதி ஒன்றித்து வருவது தனிச் சிறப்பு.

### அண்ணாமலைத் தீபம்

உண்ணாமுலை அம்மையுடன் அண்ணா மலைப் பெருமான் எழுந்தருளியுள்ள மலை திருவண்ணாமலை. இது தீ மலை அதாவது பஞ்ச பூதங்களுள் இறைவன் தீ வடிவாய் விளங்கும் பதி ரமணரும் பல சித்தர்களும் வாழ்ந்த சிவபூமி. இங்கு திருக்கார்த்திகை விழா கொடியேறி பிரமோற் சவமாக நடைபெறுகிறது.



இறைவன் பஞ்ச மூர்த்திகளுடன் நடம் செய்து வந்து காட்சி தர மலையுச்சியில் பூரணை நாளின் மாலை வேளை தீபமேற்றப்படுகின்றது.

"அண்ணாமலையை நினைக்க முக்தி" என்பது சைவ வழக்கு இந்த அழகான உற்சவம் பல்வேறு இந்திய தொலைக் காட்சிகளிலும் நேரடியாக அஞ்சல் செய்யப் படும். இயலு மானவர்கள் பார்த்து பரவசமடைந்து பயன்பெறலாம்.

### சொக்கப்பனை

இன்று மாலை ஆலயங்களில் சொக்கப்பனை ஏற்றி "கார்த்தியோ கார்த்தி", "மாவலியோ மாவலி" என்று மகிழ்வர். செக்கம் என்றால் பரமபதம், முக்திப்பேறு என்று பொருள் அதைக் காட்டி ஒலியூட்டும் காட்சியே "சொக்கப்பனை ஜோதி" என்பர்.

இக்கார்த்திகை தீபநாள் கடந்துபோன போரவல இருள் அகற்றி ஒளியூட்டி விடும் நாளாக அமைய ஞான ஒளிக்கடவுளைச் சிந்தித்து வழிபடுவோம். நம் இல்லங்கள் தோறும் ஆலயங்கள் தோறும் ஏற்றப்படும் தீபங்கள் எல்லோர் மனங்களுக்கும் ஒளியூட்டப்படும். "தமஸோ மா ஜோதிர் கமய" (இருளில் இருந்து இறைவா, ஒளியை நோக்கி நன்மை ஆற்றப் படுத்தும்) –உபநிடதம்.

தி.மயூரகிரி சர்மா

## "பார்ப்பம் ஆஞ்சறிவு திங்கள்" மலர் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்துக்கல்லூரி பார்ப்பம் வெளியீட்டுக் குழுவின் பார்ப்பம் ஆஞ்சறிவு திங்கள் மலர் வெளியீட்டு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் ஆசிரியையும் வெளியீட்டுக்குழு உறுப்பினருமான திருமதி ந. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையை ஆசிரியையும் ஆசிரியர் குழு உறுப்பினருமான திருமதி பா. ஜீவசங்கர் வழங்கவுள்ளதுடன் நூலில் முதல் பிரதியை தொழில் அதிபர் து.சிவராசா பெற்றுக் கொள்ளவுள்ளார். (ஓ-4)

## சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களது விபரங்கள் திரட்டல்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பொன் விழாவை முன்னிட்டு 2010 ஆம் ஆண்டு பொன்விழா சிறப்பு மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

இம்மலரில் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களது சுய விபரங்கள், கல்வித் தகைமைகள், சேவைகள், படங்கள் என்பன வெளிவர இருப்பதால் கடநத் 50 ஆண்டுகளில் பட்டம் பெற்றவர்கள் சகல ஆவணங்களுடனும் அவற்றின் நிழற் பிரதிகளுடனும், புகைப்படம் ஒன்றுடனும் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திற்கு சமுகம்தருமாறு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார்.

பட்டம் பெற்றவர்கள் வெளிநாட்டில் வசிப்பினும் அல்லது மரணமடைந்திருப்பினும் தகவல்களை உறவினர்கள் சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-9)

## மின் சாதனத்தை திருத்தித்தருமாறு அனலைதீவு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு தொண்டு நிறுவனம் ஒன்றினால் பெறுமதிமிக்க சூரிய மின்கல உபகரணங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்டது.

அத்துடன் குளிர்சாதனப் பெட்டியை 24 மணிநேரம் இயங்கக்கூடிய உபகரணமான இன்வேற்றர் மின்பிறப்பாக்கியும் அடங்கும். இச் சாதனமானது ஓராண்டு காலமாக இயங்காமல் உள்ளது. அதனால் குளிர் சாதனப் பெட்டியில் வைத்து பாதுகாக்க வேண்டிய ஊசி மருந்து உபகரணங்களை வைத்து பாதுகாக்க முடியாமல் உள்ளது.

அதனால் ஊசி மருந்தினை எடுப்பதற்கு ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு பயணிகள் படகுமூலம் பயணிக்க வேண்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டோருக்கு தெறிந்தும் சீர் செய்வதற்கு சம்பந்தப்பட்டோருக்கு் தெரிந்தும் சீர் செய்வதற்கு எவரும் வைத்தியசாலைக்கு வருகை தரவில்லை. இதனை உரியவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு அப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஓ)

## உதைபந்தாட்ட அணி வீரர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண உதைபந்தாட்ட அணிக்கான வீரர்கள் தெரிவு நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இவ் அணித் தெரிவில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர்கள் அனைவரும் கலந்துகொள்ள முடியும் என யாழ்.மாவட்ட விளையாட்டுப் பொறுப்பதிகாரி திருமதி எம்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



மனிதன் தானே பணத்தை உண்டுபண்ணுகிறான் ? பணம் மனிதனை உண்டு பண்ணியதாக எங்கேயாவது எப்போதாவது நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? நீ உன்னுடைய எண்ணங்களையும் சொற்களையும் முற்றிலும் ஒன்றாக இருக்கும்படி செய்தால் அதைச் செய்ய உன்னால் இயலுமானால், பணம் தண்ணீரைப்போல தானாக உனது காலடியில் வந்து கொட்டும்.

இந்தப் பிரபஞ்சத்திலேயே நன்மைக்கு அழைத்துச் செல்லும் பாதை தான் மிகவும் கரடுமுரடாகவும் செங்குத்தானதாகவும் இருக்கிறது. அந்தப்பாதையில் இத்தனை பேர் வெற்றி பெற்றிருக்கின்றார்களே என்பது தான் வியப்புக்குரிய விடயம். பல பேர் தோல்வி அடைந்து விழுந்து போனதில் ஆச்சரியமே இல்லை. ஆயிரம் முறை இடரி விழுவதன் மூலம் தான் நல்ல ஒழுக்கத்தை உறுதியாக நிலை நிறுத்த வேண்டும்.










பொலிகண்டி இந்துதமிழ் கலவன் வித்தியாலயத்தின் இருமாடிக் கட்டட திறப்பு விழாவில் யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் உரையாற்றுவதையும், அருகில் அதிபர் வே.துரைசிங்கம்,வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான சி.புஸ்பலிங்கம், என்.நந்தகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# வடக்கின் பல்வேறு இடங்களில் தேடுதல் நடவடிக்கை

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வடக்கின் பல்வேறு பிரதேசங்களில் பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் போது பாரிய அளவிலான இராணுவத் தளபாடங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் புதுக்குடியிருப்பில் அடம்பன் மற்றும் இரணைமடு ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


இந்த நடவடிக்கையின் போது ரி.81 ரக துப்பாக்கிகள்,டெட்டனேட்டர்கள் மூவாயிரத்திற்கும் அதிகமான ஏ-56 துப்பாக்கி ரவைகள் ,சி 4 வெடிபொருட்கள்,கைக்குண்டுகள் , இயந்திரத்துப்பாக்கிகள் உட்பட ஏராளமான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் விடுதலைப்புலிகளால் தயாரிக்கப்பட்ட 13 வெடிகுண்டுகளும் ,தானியக்கிகள் சிலவும் மீட்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மட்டக்களப்பு, வாழைச்சேனையிலும் இவ்வாறான தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# கனடாவில் எனக்கு நடந்தது ஏற்கனவே திட்டமிட்ட நடவடிக்கை

## இயக்குநர் சீமான்



கனடாவில் இருந்து தாம் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டமை , அதிகாரிகளால் ஏற்கனவே திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என இயக்குநர் சீமான் தெரிவித்துள்ளார்.

தாம் கைது செய்யப்பட்டு கைகள் கட்டிய நிலையில் அதிகாரிகளால் பல மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.


டொறன்ரோவில் தமிழர் அமைப்பு ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றுவதற்கு சென்றிருந்த வேளையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

இதன்பின்னர், இந்தியாவில் அவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டமை தொடர்பான வழக்கு குறித்து விசாரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் சீமான் கனடா சென்று இவ்வாறான உரையொன்றை ஆற்றியருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## உருகுவேயில்

# முன்னாள் ஆயுதக்குழுத் தலைவர் ஜனாதிபதியாகத் தெரிவு




உருகுவே நாட்டில் முன்னாள் ஆயுதக் குழுவொன்றின் தலைவரான ஜோஸ் முஜிக்கா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜோஸ்முஜிக்கா முன்னாள் இடது சாரி ஆயுதக்குழுவொன்றின் தலைவராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த இராணுவ ஆட்சிக்காலத்தின் போது சுமார் 15 ஆண்டுகள் முஜிக்கா சிறையில் தண்டனை அனுபவித்து வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

74 வயதான முஜிக்கா நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில் 50 வீதமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி தாப் ரேவாஸ்குஸின் இடத்தை முஜிக்கா நிரப்ப உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.கடந்த ஆட்சியாளர்களின் நிர்வாக காலத் தில் பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெற் றுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறது. ஊழல் மோசடிகளை களைந்து நாட்டில் நல்லாட் சியை ஏற்படுத்துவதே தமது பிரதான இலக்குஎன முஜிக்காதெரிவித்துள்ளார்.

1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் முஜிக்கா நீண்ட காலம் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தார்.

ஆயுதப் போராட்டத்தின் பாதக விளைவுகளையும் ஜனநாயக அரசியலின் அவசியத்தையும் தமது சிறைவாச காலத்தில் புரிந்து கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக கூறப்பட்டு இரண்டு வைத்திய பீட மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவர் பேராதனை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த மாதம் கலைப்பீட மாணவர் ஒருவர் பல வகைகளிலும் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டமை உட்பட ஏராளமான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இந்த நிலையில் இது தொடர்பாக 16 சிரேஷ்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டு கடும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

# வெள்ளை மாளிகையின் சிறப்பு விருந்தில் கள்ளமாகப் புகுந்த தம்பதியர்

## நேர்காணலை ஒளிபரப்ப ஊடகங்கள் போட்டி



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கடந்த வாரம் அமெரிக்கா சென்றிருந்த போது அவருக்கு அதிபர் ஒபாமா சிறப்பு விருந்து கொடுத்தார். உலகின் கவனத்தை ஈர்த்த இவ்விருந்து நிகழ்ச்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரபலங்கள் சுமார் 400 பேர் கலந்துகொண்டனர்.

பலத்த பாதுகாப்புடன் நடந்த இந் நிகழ்வில் அமெரிக்காவின் பெர்ஜினீயா மாகாணத்தைச் சேர்ந்த தாரிக் சலகீர் என்பவரும் அவரது மனைவி மிசிலியும் மிக துணிச்சலாக ஊடுருவி கலந்து கொண்டனர். ஒபாமாவுடன் மிசிலி கைகுலுக்கி பேசினார். விருந்திலும் அவர்கள் பங்கேற்றனர்.

நீண்ட நேரத்திற்கு பின்பே அவர்கள் இருவரும் வெள்ளை மாளிகையின் சிறப்பு விருந்தில் கலந்துகொள்ள முன் அனுமதி பெறவில்லை என்று தெரிய வந்தது. உரிய அனுமதி சீட்டு இல்லாமல் அவர்கள் எப்படி அரங்குக்குள் நுழைந்தனர் என்பது மர்மமாக இருந்தது.

அமெரிக்க பொலிஸாருக்கும் உளவுத் துறைக்கும் இந்த சம்பவம் கடும் அதிர்ச்சியை கொடுத்தது. தாரிக்கையும் மிசிலியையும் சோதிக்காமல் உள்ளே அனுப்பிய காவலர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடந்து வருகிறது.

இந்த சம்பவத்தால் தாரிக் -மிசிலி இருவரும் அமெரிக்கா முழுவதும் பரபரப்பாகப் பேசப்படுகின்றனர். அவர்களை பற்றிய தகவல்கள் பத்திரிகைகளிலும், இணையத்தளங்களிலும் வெளிவந்தபடி உள்ளன.

தாரிக் -மிசிலி இருவரும் வெள்ளை மாளிகை விருந்து அரங்கிற்குள் நுழைந்தது எப்படி? என்பதை சி.என்.என் தொலைக் காட்சி நேரடி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சொல்லப்போவதாக கூறியிருந்தனர். இதனால் இந்த நேரடி ஒளிபரப்பை காண ஏராளமானவர்கள் ஆவலுடன் இருந்தனர்.

ஆனால் திடீரென இந்த ரி.வி. நிகழ்ச்சியை தாரிக் -மிசிலி இருவரும் ரத்துச் செய்து விட்டனர். தங்களுக்கு யார் அதிகம் பணம் தருகிறார்களோ அவர்களுக்கே பேட்டிகொடுக்கப்போவதாக அறிவித்தனர்.

அவர்கள் 6 இலக்க அளவில் பல கோடி பணம் கேட்கின்றனர். இதனால் அமெரிக்க ரி.வி. சனல்கள் அதிர்ச்சியுடன் தாரிக்கை பேட்டி காண தயங்கிய படி உள்ளன. (ஓ-6)

# ஏ.ஆர்.ரகுமான் இசையில் திருப்பதி கீர்த்தனைகள்

(சென்னை)




திருப்பதி வெங்கடாஜலபதி பக்தி கீர்த்தனைகள் பல வெளிவந்துள்ளன. தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் உள்ளிட்ட பல மொழிகளில் இவை வெளியிடப்பட்டுள்ளன.

14ஆம் நூற்றாண்டு தெலுங்குப்புலவர் தல்லபகா அன்னமாச்சார்யா திருப்பதி வெங்கடாஜலபதி பற்றி ஏராளமான கவிதைகள் எழுதியுள்ளார்.

அவற்றை ஏ.ஆர்.ரகுமான் இசையில் பாடலாக்கி வெளியிட திருப்பதி தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

ஏ.ஆர்.ரகுமானிடம் இது பற்றி பேசியுள்ளனர். அவரும் சம்மதித்து விட்டதாக கூறப்படுகிறது.விரைவில் திருப்பதி கீர்த்தனைகளை உருவாக்குகிறார் ரகுமான். (ஓ-6)





செலான் வங்கியின் மானிப்பாய் கிளையை அதன் தலைவர் ஈஸ்மன் நாரந்கொட திறந்து வைப்பதையும் அருகில் செலான் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராசா, பொது முகாமையாளர் அஜித் பக்ரோல் ஆகியோர் அருகில் நிற்பதையும் நிகழ்வில் இடம்பெற்ற காட்சிகளையும் படங்களில் காணலாம்.



செலான் வங்கியின் சங்கானைத் திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சர்வமதத் தலைவர்கள் ஆசி உரை வழங்குவதையும் வங்கி முதல் வைப்பை மேற்கொண்ட வாடிக்கையாளருக்கு வங்கியின் தலைவர் ஈஸ்மன் நாரந்கொட வைப்புப் புத்தகம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வங்கிகளில் முதல்தர வங்கியாக செலான் வங்கி முன்னேறியுள்ளது

## அதன் தலைவர் பெருமிதம்

(மானிப்பாய்)

தனியார் வங்கிகளில் முதல் தர வங்கியாக செலான் வங்கி முன்னேறியுள்ளதாக அதன் தலைவர் ஈஸ்மன் நாரந்கொட தெரிவித்தார்.

செலான் வங்கி தனது புதிய மூன்று விரிவாக்கல் கிளைகளை நெல்லியடி, மானிப்பாய் மற்றும் சங்கானை ஆகிய பிரதேசங்களில் நேற்று வைபவ ரீதியாகத் திறந்து வைத்தது.

இதில் மானிப்பாய் பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் 2.40 மணிக்கு செலான் வங்கியின் மானிப்பாய்க் கிளையை வைபவ ரீதியாகத் திறந்து வைத்து உரையாற்றுகையிலே [illegible]யின் தலைவர் ஈஸ்மன் நாரந்கொட மேற்கண்டவாறு குறிப்பி[illegible].

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணத்தில் கடந்த 14 ஆண்டுகளாகச் சேவையாற்றி வரும் செலான் வங்கி யாழ். மண்ணில் கடந்த 2002 ஆம் ஆண்டு கால் பதித்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட பணிப்புரைக்கமைய வடக்கின் வசந்தம் திட்டத்தில் செலான் வங்கி இன்று மானிப்பாய் நகரத்திற்கும் வந்து இப் பிரதேச மக்களுக்குச் சேவையாற்றவுள்ளது.

செலான் வங்கி கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட முகாமைத்துவப் பிரச்சினை காரணமாக 18 பில்லியன் ரூபாய் நட்டத்தைச் சந்தித்தது.

எனினும் மத்திய வங்கி ஆளுநரின் தலையீட்டின் பிரகாரம் எனது தலைமையில் புதிய பணிப்பாளர் சபை அமைக்கப்பட்டு தற்போது மிகப் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தற்போது செலான் வங்கி வைப்பாளர்களுக்கு அதி கூடிய வட்டியை வழங்குவதுடன் கடன் பெறும் வாடிக்கையாளர்களிடம் குறைந்தளவான வட்டியையே அறவீடு செய்கின்றது.

அத்துடன் நெல்லியடி, மானிப்பாய், சங்கானை ஆகிய பிரதேசங்களில் இன்று திறந்து வைக்கப்படும் கிளைகளில் நாளை 2 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையில் நிலையான வைப்பில் இடும் வாடிக்கையாளர்களுக்குச் செலான் வங்கியால் தற்போது வழங்கப்படும் வட்டி வீதத்தை விடவும் ஒரு வீத வட்டி அதிகமாக வழங்கப் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது என்ற அறிவித்தலையும் செலான் வங்கியின் தலைவர் ஈஸ்மன் நாரந்கொட குறிப்பிட்டார்.

இந் நிகழ்ச்சியில் உரையாற்றிய செலான் வங்கியின் பணிப்பாளர் ஆர்.நடராஜா தெரிவிக்கையில்,



செலான் வங்கி குடாநாட்டின் மூன்று நகரங்களில் இன்று உதயமாவதற்குக் காரணம் மக்களை நாடி வந்து சேவை வழங்குவதற்காகத்தான். நாம் இப் பிரதேசங்களில் பெற்றுக்கொள்ளும் வைப்புகளை இங்கேயே கடனாக்கம் செய்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்போம்.

அத்துடன் எமது வங்கி வாடிக்கையாளர்களுக்குப் பூரணமான சேவையை வழங்கும் என நான் உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன் என செலான் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராஜா குறிப்பிட்டார். (ச-5)

# யாழ்.மாவட்ட இணைப்புச் செயலர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்புச் செயலாளராக பொன்னையா சிவபாதம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதியிலிருந்து தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனால் மேற்படி அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகத்தின் இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னாள் நெல்லியடி ப.நோ.கூ.ச. வர்த்தக முகாமையாளராகவும் கணக்காளராகவும் பணிபுரிந்ததுடன் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகச் சிறப்பாகச் செயலாற்றியவர். (ச)

# ஊனமுற்றோர் தின நிகழ்வு

யாழ்.மாவட்டத்திலுள்ள ஊனமுற்றவர்களுக்கான நிறுவனங்களும் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கமும் இணைந்து நடத்தும் சர்வதேச ஊனமுற்றோர் தின நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆ. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சமூக நலத்துறை திணைக்களத்தின் மாவட்ட திட்ட இணைப்பாளர் ரி.கிருபாகரன், யாழ்.கஜமுகன் ஹாட்வெயார் நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-4)

❖ ❖ ❖

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படும் அனைத்துலக மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்து சிறப்பிப்பதுடன் பரிசில்களை திருமதி இ.சத்தியசீலன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ச-4,19)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம் முகாமையாளர் சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை 3 மணி தொடக்கம் 5 மணி வரை ஈரோவில் பொது கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் பரிமாற்றல் பாதுகாப்பு ஆணைக்குழுவின் மனிதவள இயக்குநர் சி. கனைல் கலந்து கொண்டு ஆளணி முகாமைத்துவ கல்வி நிறுவனம் சார்பான அறிமுகம் எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். (ச-3)

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த...

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வெளி நாட்டு அரசாங் கங்களின் அழுத்தங்களுக்கு இலங்கை அரசாங்கம் தலைசாய்க்காததன் விளை வாகவே இந்த சூழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விடுதலைப்புலிகளை பாதுகாப்பதற்கான பல நாடுகள் அழுத்தம் கொடுத்தன. யுத்தகாலத்திலும் இந்த அழுத் தங்கள் பிரயோகிக்கப்பட்டன. எனினும் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ இந்த அழுத் தங்களுக்கு இசைந்து கொடுக்காமல் நிலை யாக இருந்தார்.

இந்த நிலையில் அவர்களால் புலி களை காப்பாற்ற முடியாமல் போனது. எனவே தற்போது அந்த நாடுகள் ஜனாதிபதியை வெளி யேற்றி இலங்கையில் ஆட்சி மாற் றத்தை கொண்டுவர முயற்சிக்கின்றன.

இதன் ஊடாக இலங்கையில் ஈழக்கன வை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக் கலாம் என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

எனினும் இந்த நாடுகள் எவை என குறித்துக் காட்ட விரும்பவில்லை என தெரி வித்த அவர், இது தொடர்பில் மக்களும் நிறு வகங்களும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என கோரியுள்ளார். ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள் ளார்.

இலங்கையில் புலிகள் தோற்கடிக்கப் பட்ட மைக்கு உண்மையான காரணம் யார்? என இச் செவ்வியின் போது கேட்கப்பட்ட கேள்வி ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

**தியாகம் இன்றி வெற்றிபெற முடியாது**

இதற்குப்பதில் தெரிவித்த கோத்த பாய, அரசியல் தியாகங்கள் இன்றி யுத்தத் தில் வெற்றிபெற்றிருக்க முடியாது. ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவே விடுதலைப் புலிக ளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்கத் தீர்மானித்தார்.

அவரே விடுதலைப் புலிகளை தோற் கடிப் பதற்கான இலக்குகளை அடையா ளம் காட்டினார். அதன் அடிப்படையிலேயே புலிகளை தோற்கடிக்க முடிந்தது.

சரத்பொன்சேகா இதுவரையில் வழங்கி யிருந்த செவ்விகளை அவதானித்தால் அரசியல் கட்டளைகளே விடுதலைப் புலி களை வெல்வதற்கு காரணமாக அமைந் தது என தெரிவித்துள்ளமை புரியும்.

இராணுவம் என்பது அரசாங்கத்தின் ஒரு திணைக்களம் மாத்திரமே. அதனால் தனிப்பட்டு தீர்வுகளை எடுக்க முடியாது இது அர சாங்கத்தின் கொள்கைகளையும் கட் டளை களையும் நடைமுறைப்படுத்த வேண் டிய ஒரு அமைப்பாகவே காணப்படுகின்றது.

**சரத்பொன்சேகாவின் அரசியல் நாடகம்**

சரத்பொன்சேகா பாதுகாப்புக்குறை பாடு களை முன்னிலைப்படுத்தி அரசியல் நாடகம் ஒன்றை நடத்த முனைகிறார்.

குறிப்பிட்டு ஒரு விடயத்தை சொல்ல வேண்டுமானால், சரத்பொன்சேகா ஒரு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தநிலையில் அவருக்கான பாது காப் புக்கான அவசர அவசியமில்லை. இதன் போது அவர் உத்தியோகத்திலிருந்த காலகட் டத்தில் பெற்ற சில வசதி வாய்ப்புக் களை இழக்க நேரிடும்.

இந்த நிலையிலும் அவர் ஜனாதிபதி யை சந்தித்து தமக்கான பாதுகாப்பினை வழங்கு மாறு கோரியபோது, அதனை கடிதம் மூலமாக தருமாறு ஜனாதிபதி கூறி னார்.

அதனடிப்படையிலான கடிதத்தில் கோரியிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத் தையும் சரத்பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டது. எனினும், அவர் கோரியிரு ந்த 6 பெண் பாதுகாவலர்களை மாத்திரம் சட்டமுறை பிரச்சினைகளினால் வழங்க முடியாது இருந்தது.

**தாக்குதல் அச்சம் தற்போது இல்லை**

இதற்கிடையில் சரத் பொன்சேகா விற்கு தற்போது காணப்படுகின்ற அச்சுறுத்தல் கள் குறித்து கருத்துரைத்த கோத்தபாய விடுதலைப் புலிகள் ஜனாதிபதியையோ தன்னையோ அல்லது யாரேனும் இராணு வத் தளபதிகளையோ இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் சாத்தியம் காணப்பட் டமை உண்மைதான்.

ஆனால் தற்போது நிலைமை மாறி விட்டது. கிழக்கு மாகாண கட்டளைத் தள பதியாக இருந்த ஜெனரல் பராக்கிரம பன் னிப்பிட்டியவை ஏதோ ஒரு காரணத்திற்காக சரத் பொன்சேகா பதவி நீக்கினார். இதுவே சரத் பொன்சேகா அவரின் பாதுகாப்பை குறைத் துக் கொண்டதாக கருத வேண்டும் என கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## இணக்க அரசியல் மூல...

பாடசாலைகளுக்கான கற்றல் மேம்பாட்டுக் கான உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி வீ.ஆர்.ஏ.ஒஸ்வெல்ட் தலைமை யில் வவுனியா தெற்குக் கல்வி வலய அலுவ லகத் தொகுதியில் இந்த வைபவம் நடை பெற்றது.

இந்த வைபவத்தில் அமைச்சருடன், ஈபிடிபி கட்சியின் முக்கியஸ்தர் எம்.சந்திரகு மார், வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் ரகு சிவன் சிவக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.வவுனியா தெற்கு கல்வி வல யப் பொறியியலாளர் எஸ்.சிறிதரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நா.மாணிக்க வாசகம், பண்டாரிக்குளம் விபுலானந்தா மகாவித்தியாலய அதிபர் எஸ்.ஜெயதரன் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்ததாவது, அஹிம்சை அரசியலும்சரி,வன்முறை அரசி யலும் சரி எமது மக்களுக்குப் பெரும் துன் பங்களை ஏற்படுத்தினவே தவிர எமது அரசி யல் அபிலாஷைகளுக்குத் தீர்வு தேடித் தர வில்லை.எனவே கிடைக்கின்ற சந்தர்ப்பங் களைப் பயன்படுத்தி இணக்க அரசியலுக் கான எமது கரங்களைப் பலப்படுத்து வதற்கு அனைவரும் முன் வரவேண்டும்.

இணக்க அரசியலின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என் பது எமது நம்பிக்கை.ஜனாதிபதி ஒருவர் ஆட் சிக்கு வந் ததும் இத்தகைய நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

அதற்குப் பல தடைகள் இருந்தன. முக்கி யமாக விடுதலைப் புலிகள் ஓர் அரசியல் தீர் வுக்குத் தடையாக இருந்தார்கள்.பேச்சு வார்த்தைகளில் அவர்கள் பங்கு பற்றிய போதிலும் அரசியல் தீர்வுக்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை இப்போது அந் தத் தடை நீங்கி வட்டது.

பதின்மூன்றாவது அரசியல் திருத்தச் சட்டத்தை ஆரம்பமாகக் கொண்டு பிரச்சி னைக்குப் படிப்படியாக தீர்வு காணமுடியும். இந்த அரசியல் திருத்தத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டிருக்கி றார் . இந்தியா உட்பட சர்வதேச நாடுகளும் இதனை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இதனை ஆரம்பமாகக் கொண்டு பிரச்சினைக் குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடு வதற்கு எமது கரங்களை அரசியல் ரீதியாகப் பலப்படுத்த வேண்டும் என்றார். (ச-5)

## ஜனாதிபதி வேட்பாளராக...

தேசியக் கூட் டமைப்புக்கு தமிழர் தரப் பிலிருந்து அழுத்தங்கள் வருவதாக கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வர் தெரிவித்தார். எனினும் அதுகுறித்து எந்தவிதமான தீர்மானங்களையே யோசனை களையோ கூட்டமைப்பு எடுக்கவில்லை எனவும் அவர் கூறினார். இதைவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி உறுப்பினர்களுக் கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கும் இடையிலான சந்திப் பொன்று இடம் பெற்றுள்ளதாகவும் கூறப் படுகிறது. தற்போதைய அரசியல் சூழ்நி லையை கவனத்திற் கொண்டு தமிழ் வேட் பாளர் ஒரு வரை தேர்தலில் களமிறக்கத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் சார்பில் போட்டியிடக் கூடிய வல்லமை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப் படுகின்றது. ஜனாதிபதி வேட்பாள ராக போட் டியிடக் கூடியதகுதி இரா.சம்பந்தனுக்குக் காணப்படு வதர்க சுட்டிக்காட்டப் பட்டுள் ளது. (ச-ஓ,6)

## யாழிலிருந்து...

பாடசாலைகள் உள்ளிட்டவை ஆரம்பிக்கப் பட்ட நிலையில் அங்கு கட மையாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களை கட மைக்கு திரும்புமாறு வடக்குமாகாண ஆளு நர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி கேட்டி ருந்தார்.

அத்துடன் வட பிராந்திய போக்குவரத் துச் சபையின் ஒரு பஸ்ஸும் இலவச போக்கு வரத்துச் சேவையில் ஈடுபட யாழ். அரச அதி பர் க.கணேஷ் ஏற்பாடு செய்திருந் தார். இதற்கு மேலாக வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் அரச ஊழியர் களுக்கான இலவசப் போக்குவரத்துச் சேவையை ஆரம் பித்தது.

இந்நிலையில் நேற்றுவரை கடந்த ஒரு வாரத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 102 பேர் துணுக்காய், பூநகரியில் ஆரம் பிக்கப் பட்ட அரசநிறுவனங்கள், பாடசாலை களில் கடமைக்கு திரும்பியுள்ளனர். (ச-5)

## விரிவுபடுத்தப்பட்ட மகிந்த...

விஞ்ஞாபனமாக இந்த மகிந்த சிந்தனைக் கொள்ளைத் திட்டம் அமையவுள்ளது மஹாவலி கேந்திர நிலையத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கல ந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப் பட்ட தன் பின்னர் புதிய விரிவாக்கப்பட்ட மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டம் மக்கள் முன் னிலையில் சமர்ப்பிக்கப்ப டும் என அவர் தெரிவித்துள்ளார். நாட்டை அபிவிருத்தி செய்வது தொடர் பில் புதிய கொள்கைத் திட்டத்தில் விரிவானவழி முறை கள் பரிந்துரைக்கப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கை யில்முதல் தடவையாக தேர்தல் கொள் கைப் பிர கடனமொன்றின் விரிவாக்கப் பட்ட திட்டம் மீண்டும் முன்வைக்கப்படு வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## வலி.வடக்கு மக்கள் விரைவில்...

சிதம்பரநாதன், ஈழமக்கள் ஜனநா யகக் கட்சியின் உறுப்பினர் எஸ்.சீவ ரட்ணம், உட்பட 300 பேருக்கு மேற் பட்ட வலி. வடக்கின் இடம் பெயர்ந்த மக்களும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் ஆராயப்பட்டவை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பி னர் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகு தியிலிருந்து இடம் பெயர் ந்த மக்களை உடனடியாக மீளக்குடி யமர்த்தப்பட வேண்டும். அதற்குமுன் அவர்களின் சொந்த வீடுகள், விவ சாய நிலங்களை சென்று பார்வை யிடு வதற்கு அனுமதிக்கப்பட வேண் டும்.

அத்துடன் பலாலி விமான நிலை யத்தை விஸ்தரிப்பதற்காக மக் களின் வயல் நிலங்கள் அபகரிக் கப் படவுள்ளது. எனவே அந்த நடவடிக் கை தடுத்து நிறுத்தப்பட்டு பலாலி விமான நிலையத்தை பலாலி கடற் கரையில் அமைக்க வேண்டும்.

இவ்வாறானதொரு நடவடிக் கை தற்போது அம்பாந்தோட்டை யில் அமைக்கப்பட்டு வரும் விமான நிலையத்திற்கான காணி விடயத்தி லும் ஏற்பட்டது.

அங்கு புதிதாக விமான நிலை யம் அமைப்பதற்கு பொதுமக்களின் காணிகளை பயன்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படு மெனக் கருதி செயற்பட்ட ஜனாதிபதி,

பலாலிவிமானநிலையம் அமைக் கப்படும் திட்டத்திலும் சிறந்த முடி யை எடுக்க வேண்டும். இத்தீர்மானங் கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, யாழ். அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு நடவடிக்கைகாக அனுப்பி வைத்தல்.

அத்துடன் எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்ப் பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வை நேரில் சந்தித்து வலி. வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் தொடர் பில் ஆராயப்படுமென தீர்மானிக் கப்பட்டது என யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனா திராஜா குறிப்பிட்டார். (ச-5)

## தபால் மூல...

ஈடுபடும் சகல அரசாங்க அதி காரி கள் மற்றும் உத்தி யோகஸ்தர்களும் தபால் மூலம் வாக்களிக்க விண் ணப்பிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)


இன்று ஆரம்பம்
NEW SCIENCE ACADEMY
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
தரம்:- 9,10,11
புதிய கல்வியாண்டு:-2010
ஆரம்பம்:- 01.12.2009
TUE.2.30 PM
தொடர்பு:-
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
(C-3818)

LAVA HOSPITAL
75, கோயில் வீதி (I.C.R.C. சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். T.P. :- 021 222 4333
SCAN, ECG மற்றும் இரத்த, சல
பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
அடிப்படை உடற்பரிசோதனைகள்.
உடல் பருமனுள்ளவர்களைப் பரிசோதிப்பதற்கான
'OBESITY' PACKAGE Rs. 1200 /=
(C-3809)

விவாத அரங்கு
1 இற்கான தீர்ப்பை
நாளை (02.12.2009)
புதன்கிழமை எதிர்பாருங்கள்...

பதவி வெற்றிடம்
இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனம் தனது செயற்பாட்டினை யாழ். நகரில் அண்மையில் ஆரம்பித்து முன்னெடுத்து வருகிறது.
இந்நிறுவனத்துக்கு பல்வேறு பதவி நிலைவெற்றிடம் காணப்படுகிறது.
அடிப்படைத் தகைமை G.C.E.O/L கணிதம் உட்பட 6 பாடங் கள் சித்தி.
வயது - 18-60
I காப்புறுதி துறையில் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
II பகுதி நேரமாக வேலை செய்பவர்கள் விரும்பப் படுவர். (முன் அனுபவம் தேவையில்லை)
III விண்ணப்பம்- முடிவு திகதி 10.12.2009
மே/பா வலம்புரி
விளம்பர இல.4108,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (4108)

LIFCO -உடுப்பிட்டி
A/L DAY CLASS
வர்த்தகப்பிரிவு
பொருளியல் எஸ்.எஸ்.சிறி
வணிகக் கல்வி ரி.திலீபன்
கணக்கீடு எஸ்.எஸ்.சிவதாஸ்
ஆரம்பம்:04.12.2009
வெள்ளி 3 மணிக்கு
(C-3819)

விற்பனைக்கு
bajaj Boxer நல்ல நிலையில் ஒரு கைப்பாவனையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
புதிய 6x5 அளவுடைய கோழிக்கூடு விற்பனைக் குண்டு.
071 8474325
077 2395783

நாளை (வர்த்தகப்பிரிவு) காலை-9
DAY CLASS
DMI JAFFNA
5.12.2009 (கலைப்பிரிவு) காலை-8
(C-3805)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1[illegible].12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.